ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

29.11.2017 - மலர் 14, இதழ் 40



## உயிர் பல்வகைமையின் முக்கியத்துவம்...





கடுகண்ணாவ புகையிரத அருங்காட்சியகம்



மோட்டார் சைக்கிள் எம்பியூலன்ஸ்




நாடெங்கும் 'இன்ஃப்ளுவென்ஸா' வைரஸ் பரவல்



க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு ஆயத்தமாகும் வழிமுறைகள்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடவசதிக்கேற்ப பயிர் செய்வோம்



நகர வீடுகளில் இடவசதியின்மை காரணமாக, சாடிகளில் (Pots) பயிர் செய்யும் முறை தற்போது அதிகரித்து வருகின்றது. அந்தவகையில், பல பயிர்ச் சாடிகளை ஓரிடத்தில் வைத்து பயிர் செய்வதற்கு 'தட்டு முறை பயிர்ச்செய்கை' பேருதவி புரிகின்றது. இது சிறியதோர் இடத்தில் செங்குத்தாக அமைக்கப்பட்ட அடுக்குச் சட்டத்தில் பயிர்ச் சாடிகளை வைத்து உச்சப் பயன்பாட்டைப் பெறக்கூடிய ஒருவகை பயிர்ச் செய்கை முறையாகும்.

## விவசாயத் தட்டுமுறை

இது சிறிய இடமொன்றில் மேற்கொள்வதற்குப் பொருத்தமானதொரு விவசாய முறையாகும். மூன்று பக்கங்களிலும் சாடிகளை வைக்கக்கூடியதாக இருப்பதால் சூரியஒளி நன்றாக விழும் ஓரிடத்தில் இதனை அமைத்துக் கொள்ள வேண்டும். உறுதியான தடி அல்லது பலகை இரும்பு அல்லது தகடு (Sheet) போன்றவற்றைப் பயன்படுத்தி பிரமிட் வடிவத்தில் தட்டுமுறையை அமைத்துக் கொள்ளலாம். வீட்டில் சூரியஒளி கிடைக்கின்ற ஓரிடத்தில், பல்கனியில் அல்லது தாழ்வாரத்தில்கூட, இதனை அமைத்துக்கொள்ளலாம்.



## அமைக்கும் விதம்

வீட்டில் பயிர் தட்டு ஒன்றினை மண்ணில் ஊன்றியபடி கூட அமைக்க முடியும். இதற்காக அதிக நேரம் சூரியஒளி படும் இடம் ஒன்றினை தெரிவு செய்து கொள்ளுங்கள். புல், பூண்டுகள், கல், சரளை கல் போன்றவற்றை அகற்றி சமதரையாக அமைத்துக்கொள்ளவும். முக்கோண வடிவில் இரண்டு அடி இடைவெளி விட்டு மூன்று தடிகளை நாட்டவும். (வசதி கருதி தடிகளின் உயரத்தை 4 அடியாக மட்டுப்படுத்தவும்) தடிகளின் மேல் நுனிகளை ஒன்றிணைத்து கயிறு அல்லது பைன்டிங் கம்பியைக் கொண்டு உறுதியாகக் கட்டவும். (ஆணி அடித்தும் அவற்றை இணைக்க முடியும்) ஒரு சட்டத்திற்கு ஆறு பலகைகள் வீதம் முக்கோண வடிவில் கட்டவும். (தூணின் உள்ளேயும் வெளியேயும்) சாடிகளை வைப்பதற்கு ஏற்ற விதத்தில் தேவையான அளவு மரச்சட்டங்களை அமைத்துக்கொள்ளவும் முடியும்.பயிரின் வகைகளுக்கேற்பவும் சாடிகளின் உயரத்திற்கேற்பவும் மரச் சட்டங்களுக்கிடையிலான இடைவெளியை கூட்டவும் குறைக்கவும் முடியும்.

## சாடிகளை அமைத்தல்

அதிக நிறையுள்ள சீமெந்துச் சாடிகளையோ அல்லது வேறு வகை சாடிகளையோ பயிர்த்தட்டில் வைப்பது கடினமாகும். எனவே, அகலமான வாயுள்ள தயிர் சட்டி, ஐஸ் கிறீம் பெட்டி, ஓரளவு உயரமான பாவித்த பெயின்ட் வாளி மற்றும் சிறிய பேசின் என்பனவற்றிலேயே பயிர்களை வசதியாக நாட்ட முடியும். பெரிய சாடிகளை கீழ் தட்டுகளிலும் சிறிய சாடிகளை மேல் தட்டுகளிலும் வையுங்கள். மண் மற்றும் கொம்போஸ் இரண்டையும் ஒன்றுக்கு ஒன்று என்ற விதத்தில் அல்லது சரிசமமாகக் கலந்து ஒரு கலவையை உருவாக்கி சாடிகளை நிரப்பிப் பயிர்களை நடுங்கள். சாடிகளின் அடிகளில் துவாரமிட்டு நீர் வெளியேற அல்லது வடியும் விதத்தில் அமைத்துக்கொள்ளுங்கள். சாடிகளுக்கு கண்கவர் நிறப்பூச்சுகளை பூசினால் மென்மேலும் அழகாகக் காட்சியளிக்கும்.

## பொருத்தமான பயிர்கள்

கோவா, நோக்கல், மிளகாய், மரப்பசளி, இஞ்சி, ரம்பை போன்ற பயிர்கள் நாட்டுவதற்கு சிறந்தது. அத்தோடு, மருத்துவ மூலிகைகள் பலவற்றையும் நாட்டி ஒரே இடத்தில் வைத்திருப்பதற்கு இந்த பயிர்த்தட்டு முறை மிகவும் சிறந்தது. புதர்களுடன் கூடிய பயிர்கள், கீரை வகைகள், அழகிய மலர் வகைகள் என்பனவும் இதில் நாட்டுவதற்குப் பொருத்தமானது.

## நீர் ஊற்றுதல்

பயிர்ச் சாடிகள் சிறியதாக இருப்பதால் அதிக நேரம் மண்ணில் நீர் தேங்கி நிற்காது. அதனால், நாள்தோறும் நீர் ஊற்ற வேண்டும். மலர்வாளி மூலமோ அல்லது சிறியதோர் பாத்திரத்தின் மூலமோ அனைத்து பயிர்ச்சாடிகளுக்கும் நீர் ஊற்றுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆசிரியர் இடமாற்றம் நேர்த்தியாக இல்லை...'

## ஆசிரியர் சங்கம் புகார்

பாடசாலை ஆசிரியர் இடமாற்ற செயற்பாடுகள் நேர்த்தியான முறையில் நடைபெறவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.
குறிப்பாக, ஆசிரியைமார் பலருக்கு தங்குமிட வசதிகளற்ற பாடசாலைகளுக்கு மாற்றல் வழங்கப்பட்டிருப்பதாகவும் இன்னும் சிலர் ஆசிரிய வெற்றிடம் இல்லாத பாடசாலைகளுக்கு இடம் மாற்றப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து கல்வி அமைச்சின் செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டதாகவும் உரிய நடவடிக்கை எடுப்பதாக செயலாளர் தெரிவித்த போதிலும், எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ள ஆசிரியர் சங்கம், இதனையிட்டு மனித உரிமைகள் அமைப்பிடம் புகார் தெரிவிக்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

# மாணவர்களின் அவசர சிகிச்சைக்கென நிதியம்



பாடசாலை மாணவர்களுக்கு ஏற்கனவே 'சுரக்ஷா' எனும் இலவச காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள அரசாங்கம், மாணவர்களின் அவசர சிகிச்சைகளுக்கென மேலதிக நிதியுதவிகளை வழங்கும் மற்றுமொரு திட்டத்தையும் அறிமுகப் படுத்தவுள்ளது.

குறிப்பாக, மாணவர்களுக்கு விபத்து அல்லது ஆபத்தான சம்பவங்கள் நிகழும்போது 'சுரக்ஷா' திட்டத்தின்கீழ் காப்புறுதி நிதி பெறப்படலாம். எனினும், அதற்கும் மேலதிகமாக நிதி தேவைப்படுமிடத்து அதற்கு உதவிடும் முகமாகவே, மேற்படி மானிய முறையிலான உதவியை வழங்குவதற்கென நிதியம் ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது. ஜனாதிபதி நிதியத்தை ஒத்த வகையில் அவசர நிதியுதவி வழங்கும் உதவி நிதியமாக இந்த நிதியம் செயற்படுத்தப்படும்.

விஜய்
த.பெ.எண் 2037,
கொழும்பு.
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

## ஆசிரிய பயிற்சி நெறிக்கு நிதி ஒதுக்கீடு

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்காக 2 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியிருப்பதாக கல்வித்துறை அமைச்சு அறிவித்துள்ளது. பாடசாலைகளில் கல்வியின் தரத்தை



உயர்த்தும் நோக்கிலேயே, இச்செயற்பாட்டை முன்னெடுப்பதாகவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, இப்பயிற்சி நெறிக்கு தேசிய கல்விக் கல்லூரியைச் சேர்ந்த 35 அதிகாரிகள் அண்மையில் மலேசியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், இவர்களினூடாக ஆசிரியர்மாருக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படவிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# 'இன்ஃப்ளுவென்ஸா வைரஸ்' நாடெங்கும் பரவல்




தற்போது நாட்டின் பல இடங்களில் 'இன்ஃப்ளுவென்ஸா வைரஸ்' பரவி வருவதாகவும் இது குறித்து அவதானமாக இருக்குமாறும் சுகாதாரத்துறை அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

பொதுவாக; நொவெம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் 'இன்ஃப்ளுவென்ஸா' வைரஸ் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் 'இன்ஃப்ளுவென்ஸா பி' வைரஸ் காரணமாகவே, இத்தொற்று ஏற்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. காய்ச்சல், இருமல், உடல் நோவு, பசியின்மை ஆகியன இந்நோயின் அறிகுறிகளாகும்.

# அடுத்த வருடம் தொடக்கம் 6,000 பாடசாலைகளுக்கு லெப்டொப்கள் வழங்கல்

அடுத்த வருடம் 6,000 தேசிய பாடசாலைகளுக்கு மடிக்கணினிகளை (லெப்டொப்) வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி, 6 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புகளுக்கு 10 தொடக்கம் 50 லெப்டொப்கள்வரை வழங்கப்படவுள்ளன. இதற்கமைய, 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக்கொண்ட பாடசாலைகளுக்கு 50 லெட்டொப்களும், 1000 இற்கும் 2000 இற்கும் இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு 20 தொடக்கம் 40 லெப்டொப்களும் 1000



இற்கும் குறைவான மாணவர்களைக்கொண்ட பாடசாலைகளுக்கு 10 தொடக்கம் 25 லெப்டொப்களும் வழங்கப்படவிருப்பதாக தெரியவருகின்றது.

குறித்த லெப்டொப்கள் கல்வி அமைச்சினால் 3 வருட வாடகை ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்டே வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தகவல் தொழில்நுட்பம் கட்டாய பாடமாக்கப்படும்!

## கல்வித்துறை அமைச்சர் எதிர்வுகூறல்

விரைவில் தகவல் தொழில்நுட்ப பாடம் (IT) கட்டாய பாடமாக்கப்படும் என கல்வித்துறை அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் அனைத்துக் கல்வி அடிப்படை கட்டமைப்புக்களும் தகவல் தொழில்நுட்பத்தை அடித்தளமாகக்கொண்டே அமைக்கப்படவுள்ளன. குறிப்பாக, கிராமிய மட்டங்கள் வரையில் இந்த வியாபிப்பு அமையும். எனவே, அனைத்துப் பாடசாலைகளிலும் தகவல் தொழில்நுட்ப கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் வகையில் அதற்குரியவாறு பயிற்றப்பட்ட ஆசிரியர்களை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாகவும் கல்வி அமைச்சர்



மேலும் தெரிவித்துள்ளார். பாடசாலை நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழகியவர்களைக் கைவிடாதே

இடையன் ஒருவன் தன்னுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அப்போது எதிர்பாராத விதமாக அவன் ஆடு மேய்த்த இடத்தில் பனிப் புயல் அடிக்க ஆரம்பித்தது. அதிலிருந்து தப்பித்துக்கொள்ளத் தன் ஆடுகளுடன் அருகில் உள்ள குகை ஒன்றில் தஞ்சம் அடைந்தான். அவனைப் போலவே வேறு சில காட்டு ஆடுகள் அவனுக்கு முன்பே அந்தக் குகையில் தஞ்சம் அடைந்திருந்தன. அவற்றின் அழகையும், பருமனையும் கண்டு இடையன் மனதைப் பறிகொடுத்தான்.

ஆகவே, தான் சேகரித்துக் கொண்டு வந்திருந்த உணவுகளை அந்தக் காட்டு ஆடுகளுக்குப் போட்டான். புயல் பல நாட்கள் நீடித்ததால் அங்கிருந்து அவனால் வெளியேற முடியவில்லை. இதனால், இடையன் தன் சொந்த ஆடுகளைக் கைவிட்டு எங்கிருந்தோ வந்து அங்கு தங்கியிருந்த காட்டு ஆடுகளுக்குத் தீவனங்களை எல்லாம் போட்டான்.

இதனால் இடையனின் சொந்த ஆடுகள் உண்ண உணவில்லாமல் பட்டினியால் இறந்தன. ஆனால் காட்டு ஆடுகளோ, நன்றாக ஆரோக்கியமாக இருந்தன. புயல் நின்றது. காட்டு ஆடுகள், இடையனிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் தங்கள் வழியே செல்ல ஆரம்பித்தன. அப்போது இடையன் பொறுக்க முடியாமல் கூறினான்.



"அட நன்றி இல்லாத துரோக மிருகங்களே, இதுவரை என் சொந்த ஆடுகளுக்குக்கூட உணவிடாமல் உங்களுக்கு உணவிட்டு ஊட்டி ஊட்டி வளர்த்தேனே, அதற்குக் காட்டும் கைமாறா இது?" இதைக் கேட்டு காட்டு ஆடுகள் நின்றன. பலத்த குரலில் சிரித்தன. பின் கூறின.

"அட மூட இடையா, நீ முன் பின் யோசிக்காமல் உனக்கே சொந்தமான உன் உடைமைகளான ஆடுகளை எங்கள் பொருட்டுக் கைவிட்டாய். எங்கள் அழகு, இளமை, செழிப்பு, உடல் வனப்பு ஆகியவை உனக்குப் பிடித்திருந்தன. ஆகையால் நீ உன் அப்பாவி ஆடுகளைப் புறக்கணித்தாய். எங்களைச் சேர்த்து வைத்திருந்தாய். இதற்கு ஆசைப்பட்டு நாங்கள் உன்னோடு இருந்தால், நீ உன் உடைமைகளான ஆடுகளைக் கைவிட்டது போல, எங்களையும் ஒருநாள் கைவிட மாட்டாய் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லையே! எங்களை விட அழகானவர்கள் உனக்குக் கிடைத்தால் உன் பழைய ஆடுகளுக்கு நேர்ந்த கதிதான் எங்களுக்கும் என்பதை நாங்கள் அறிய மாட்டோமா என்ன?" என்றன காட்டு ஆடுகள்.

திகைத்து நின்றான் இடையன். தன் தவறை உணர்ந்து வருந்திய அவன் வெறுங்கையுடன் வீடு திரும்பினான்.

---

# பதற்றத்தில் கொள்ளையர்கள்

## கால இயந்திரம் 18

**தொடர்கதை...**

-ஜெ.விபாகர்

**நால்வரும் சந்தோஷத்தில் பட்டனை அழுத்தி கதவைத் திறக்க முற்படுகையில், சில பேச்சுக் குரல்கள் கேட்டன. வினித் பட்டனை அழுத்தாமல் அதனைச் செவிமடுத்தான்.**

"ஓஹோ... இப்போது தான் விளங்குது... அப்போ இந்த இயந்திரத்துக்காகத் தான் அந்தப் பொருளை இங்கே கொண்டு வந்தியா...!?"

ஒரு முரட்டுக் குரல், மிரட்டும் தொனியில் வினித்தின் தந்தையைப் பார்த்துக்



கேட்டது. நால்வரும் ஜன்னலுக்கு அருகில் சென்று கவனித்தார்கள். வினித்தின் பெற்றோரை சுற்றி சில மனிதர்கள் சூழ்ந்திருந்தார்கள். பெற்றோரின் முகங்களில் பயமும் பதற்றமும் தெரிந்தது...

"வினித்! யார் இவர்கள்? என்ன நடக்கிறது?- அஹமட் கேட்டான்"

"எனக்கும் தெரியவில்லை. ஆனால், நான் நினைகின்ற படி... கொள்ளையர்கள்... நாங்கள் எதிர்க்க வேண்டிய தீயவர்கள்... இவர்கள் தானா..!?"

"ஆம்... அப்படித்தான் நானும் நினைக்கிறேன்"

"அவர்கள் ஏன் இங்கு வந்தார்கள் ? எலிமன்ட் எக்ஸ் அப்பாவின் ஆய்வு நிறுவனத்தில்தானே இருக்கிறது...?!"

வெளியில் அந்த மனிதர்கள் பேசுவது மீண்டும் அவர்கள் காதுகளை எட்டியது. நால்வரும் கூர்ந்து கேட்டார்கள்...

"உண்மையை சொல்லு! என்ன இயந்திரம் இது..?! இதற்குள்ளேதான் அந்த பொருளை மறைத்து வைத்திருக்கிறாயா...!? உள்ளே இருப்பது யாரு? உன் பிள்ளைகளா??.."

அந்தக் கேள்விக்குப் பிறகு அவர்களுக்கு சகலதும் புரிந்தது. "அப்பா அந்த பொருளை... அதாவது எலிமன்ட் எக்ஸை இங்கே கொண்டு வந்திருக்கிறார்...!"

"அதன் சக்தியைக் கொண்டுதான் இந்த கால இயந்திரத்தை உருவாக்குவதில் வெற்றி பெற்றிருக்கிறார் !"

"இப்போதும் அது இந்த இயந்திரத்தினுள்தான் எங்கோ இருக்கிறது..."

"இப்போது நமக்கு மீதமாக இருப்பது ஒன்றே ஒன்றுதான்!.."

"அவர்களை எதிர்க்க வேண்டும்!"

"ஆனால்... ஆயுதங்கள்..!?!?..."

"அண்ணா! இதோ, பாருங்கள் - ஒரு பெட்டி இருக்கிறது..."

வர்ஷா இயந்திரத்தின் ஒரு கீழ்மூலையில் கிடந்த பளபளப்பான ஒரு பெட்டியை கையில் எடுத்தாள். அது ஒரு காற்பந்தின் அளவில் இருந்தது. ஆனால் மிகுந்த பாரமாக இருந்தது.

"யார் இதை இங்கே வைத்திருப்பார்கள்...?!"

"என்ன நடக்கப் போகிறது என்பதைத் தெரிந்த யாரோதான் வைத்திருப்பார்கள்.."

"அதாவது, இருபத்தேழாம் நூற்றாண்டில் யாரவது ஒருவரா..!?"

"இந்தப் பெட்டியை என்ன செய்வது...!?"

அதே நேரம், வீட்டுக்கு வெளியிலிருந்து ஒரு பெரிய சத்தம் கேட்டது. ஒரு ஒலிபெருக்கியின் உதவியுடன் எல்லாப் பக்கமும் கேட்கும் விதமாக ஒரு குரல் பேசியது.

"ராணுவம் உங்களை சுற்றி வளைத்திருக்கிறது! உங்களுக்கு தப்பிக்க வழியில்லை. யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யாமல் மரியாதையாக சரணடைந்து விடுங்கள்!"

வீட்டின் உள்ளே இருந்த கொள்ளையர்கள் பதற்றம் அடைந்தனர். அவர்களின் தலைவன் ஒரு துப்பாக்கியை வினித்தின் தந்தைக்கு நேராகப் பிடித்து, மிரட்டினான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2017இல் அதிக வெப்பமான காலநிலை

உலக வலம்

அதிக வெப்பம் கொண்ட ஆண்டுகளில் 2017ஆம் ஆண்டும் இடம் பிடித்துள்ளது என்று



சர்வதேச காலநிலை கண்காணிப்பு அமைப்பு குறிப்பிட்டுள்ளது. சுற்றாடலுக்கு எதிரான தவறான மனித செயற்பாடுகளின் அதிகரித்த தன்மையே, இதற்குக் காரணம் என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். அந்தவகையில், இந்த ஆண்டு முழுவதும் மோசமான காலநிலை மாற்றங்களையும் அதனால் ஏற்பட்ட பெரும் பாதிப்புகளையும் அழிவுகளையும் உலகம் எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



## 'அயர்ஸ்' மீது ஏறத் தடை

அவுஸ்திரேலியாவில் உள்ள 'அயர்ஸ்' மலையானது, அந்நாட்டின் சுதேசிய பழங்குடிகளின் வணக்கத்திற்குரிய மலையாகக் கருதப்படுவதனால் இம் மலையின்மீது ஏறுவதற்கு அந்நாட்டு அரசாங்கத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. 'தயவு செய்து மலை ஏறாதீர்கள்' என்று பல ஆண்டுகளாக பதாதைகள் வைக்கப்பட்டுள்ள போதிலும் சுற்றுலாப் பயணிகள் அதனை பொருட்படுத்துவதே இல்லை. இதனால் 2019ஆம் ஆண்டு முதல் இந்த மலையில் ஏறுவதற்கு சட்ட ரீதியாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

## மிகப் பிரமாண்டமான கோள்



OGLE- 2016- BLG- 1190Lb என்று பெயரிடப்பட்டுள்ள இந்த பிரமாண்டமான கோள் எமது சூரியத் தொகுதியில் உள்ள வியாழக் கிரகத்தினை விட 13 மடங்கு பெரியதாகும். இதன் பிரமாண்டமான அளவு காரணமாக, இதனை கோளாக அங்கீகரிக்க முடியுமா என்பதில் சர்ச்சைகள் நிலவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மெக்ஸிகோவில் அரிய வகை கடல் உயிரினம்

மெக்ஸிகோவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த அரிய வகை உயிரினம் உரிய வகையில் பாதுகாக்கப்பட்டபொழுதிலும் துரதிருஷ்டவசமாக அது உயிரிழந்துள்ளது. 'வக்கீற்றா' என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த உயிரினம் உலகின் மிகவும் சிறிய வகை கடல் பன்றி இனங்களுள் ஒன்றாகும். தற்போது உலகில் 30 வக்கீற்றாக்கள் மட்டுமே எஞ்சியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இவற்றின் தோற்றம் காரணமாக, இவற்றை 'கடல் பெண்டாக்கள்' என்றும் அழைக்கின்றனர்.



# மோட்டார் சைக்கிளில் எம்ப்யூலன்ஸ் சேவை

## இந்தியரின் இலவச சமுதாயப் பணி





இந்தியாவின் மேற்கு பெங்காலில் 'தலபாரி' எனும் கிராமப் பகுதி உள்ளது. இது எவ்வித வாகன வசதிகளுமற்ற ஒரு பின்தங்கிய கிராமமாகும். இக்கிராம மக்களுக்கு அவசர மருத்துவ வசதிகள் தேவையாயின் நகரப்பகுதிக்கு செல்லவேண்டியிருந்தது. அதற்குண்டான வாகன வசதிகளும் அவர்களுக்கு இருக்கவில்லை. எனவே, இதற்கு ஒரு தீர்வைக் காணவேண்டும் என சிந்தித்த சமூக ஆர்வலரான காரிமுல் ஹக் தனது சொந்தச் செலவில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் 'எம்யூலன்ஸ்' வண்டியொன்றை வடிவமைத்தார். இதில் முதலுதவி உபகரணங்கள், மருந்து வகைகள், ஒக்சிஜன் சிலிண்டர், இரத்த அழுத்தம் பார்க்கும் கருவி போன்ற அனைத்து அவசியத் தேவைகளையும் கொண்டதாக இந்த மோட்டார் சைக்கிள் எம்யூலன்ஸ் அமைந்திருந்தது.

சுகவீனமுற்றவர்களுக்கு அவசர முதலுதவிகளை அளிப்பதுடன், அவர்களை இந்த மோட்டார் சைக்கிள் எம்யூலன்ஸிலேயே கொண்டு சென்று மருத்துவமனையிலும் சேர்ப்பிப்பார். இவ்வாறு இவர் நான்காயிரம் பேரின் உயிரைக் காத்துள்ளார். 24 மணிநேரமும் இவரது இந்த சேவை இலவசமாகவே வழங்கப்படுகின்றது. ஹக்கின் சமூக சேவையை கவனத்திற்கொண்டு அவருக்கு இந்திய அரசாங்கத்தின் 'பத்மபூஷன்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. (…
# சித்தி பெற…




ஒவ்வொரு வகுப்பிலும் பிள்ளைகள் கற்றவைகளை அளவீடு செய்வதற்காக பரீட்சைகள் நடாத்தப்படுவதுண்டு. கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் இது சாதாரணமாக நடைபெறும் ஒரு விடயமாகும். மேலும், பரீட்சைகளுக்கு ஆயத்தப்படுத்துவது என்பது ஒரு மாறுபட்ட ஒழுங்கு முறைக்குட்பட்ட ஒரு நடைமுறையாகும். பரீட்சைக்கு சரியான படிமுறையில் தயாரானால் பரீட்சை என்பது அச்சமற்ற மிகவும் இலகுவான ஒரு நடைமுறையாக அமைந்துவிடும். எனவே, எப்படி ஒழுங்கு முறைப்படி பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவது? என்பது தொடர்பில் நாம் இங்கு ஆராய்வோம்.

## பரீட்சைக்குத் தயாராகுதல்

பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தல் என்பதன் அர்த்தம் என்ன?

1. பாடங்கள் அனைத்தையும் முறையாகக் கற்று முடித்திருத்தல்.
2. சகல பயிற்சிகளையும் முறையாக முடித்து வைத்திருத்தல்.
3. சகல பாடங்களையும் முறையாக நினைவில் வைத்துக் கொள்ளத் தேவையான அனைத்து செயல்களையும் மேற்கொண்டிருத்தல்.
4. நினைவில் வைத்திருத்தல், கிரகித்துப் புரிதல் குறித்து தமக்குள்ளேயே கணிப்பீடுகளை மேற் கொள்ளல்.
5. கேள்விகளின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றலை உயர் மட்டத்தில் வைத்திருத்தல்.
6. வேகமாக எழுதும் ஆற்றலைப் பெறல்.
7. காலத்தை முகாமைத்துவம் செய்தல்.

## நினைவாற்றலை உயர் மட்டத்தில் வைத்திருத்தல்

அதிகளவிலான தனியார் வகுப்புகளுக்குச் செல்வதாலும் இரவு வேளைகளில் கண்விழித்து அதிக நேரம் புத்தகங்களை வாசிப்பதாலும் நினைவாற்றலை உயர் மட்டத்தில் வைத்துக்கொள்ளலாம் என மாணவர்களும் பெற்றோர்களும் கருதலாம். பரீட்சை குறித்து காணப்படும் தேவையற்ற அச்சமே, அத்தகைய முறையொன்றினைக் கடைப்பிடிக்கக் காரணமாகும்.

நினைவாற்றல் என்பது சிந்தனையில் பதிவது… →

1. வாசிப்பதன் மூலம் நூற்றுக்கு 10%
2. கேட்டல் மூலம் நூற்றுக்கு 20%
3. கண்ணால் பார்ப்பதன் மூலம் நூற்றுக்கு 30%
4. கேட்டல், பார்ப்பதன் மூலமும் நூற்றுக்கு 50%
5. தாம் வாசித்து, எழுதுவதன் மூலம் நூற்றுக்கு 70%
6. தான் செய்ததை சொல்வதன் மூலம் நூற்றுக்கு 80%




### இதன்மூலம் தெளிவாவது…

இதன்மூலம் தெளிவாகத் தெரியும் விடயம் என்னவென்றால் செயல் வடிவில் கற்பதன்மூலம் உச்ச நினைவாற்றலை பெற முடியும் என்பதாகும். மிகவும் நீண்டநேரம் பல விடயங்களைக் கேட்டுக் கொண்டிருப்பதாலோ அல்லது மிக நீண்ட நேரம் தொடர்ந்து வாசிப்பதாலோ பெறக்கூடிய நினைவாற்றலைவிட, செயல் வடிவத்தில் கற்றலை மேற்கொள்ளும்போது, குறுகிய நேரத்தில் மனதில் நிலைநிறுத்தக்கூடிய அறிவாற்றலையும் கல்வியையும் நாம் பெறலாம்.

## நினைவில் தங்கும் ஆற்றல்

ஏதாவதொன்றினை மனதில் நிலைநிறுத்திய பின்னர் அது நினைவில் இருந்து அகலாமல் இருப்பது முதல் 24 மணி நேரத்திற்குள் நூற்றுக்கு 75 வீதமாகும். இதனை இலகுவாக கூறுவதென்றால் இன்று படித்த பாடம், இன்று நினைவில் வைத்திருந்தால் நாளை முழுவதும் மிகவும் உயர்ந்த மட்டத்தில் நினைவில் வைத்திருக்க முடியும். எனினும், அதற்கு பின் வரும் நாட்களில் அவ்வாறு மறக்காமல் நினைவில் வைத்திருக்கும் ஆற்றல் நூற்றுக்கு 20 வீதமாகக் குறைவடையும்.



## நினைவாற்றலை அதிகரித்துக்கொள்ள…

நினைவில் வைத்திருந்ததை மீளக் கற்ற…
மூலம் அல்லது மீண்டும் மீண்டும் கிரகித்த…
மூலம் நினைவாற்றலையும் ஞாபகப்படுத்…
மட்டத்தில் வைத்துக்கொள்ள முடியும். இ…

1. பாடக்குறிப்புகளை செவிமடுத்துக்…
படங்களுடனான குறிப்புகளை தய…
2. விடயப் பரப்பை ஒன்று சேர்த்து சு…
குறிப்புகளை எழுதுதல்.
3. நண்பர்களுடன் ஒன்…ணந்து பா…
குறிப்புகளையும் கேள்வி- பதில்க…
கலந்துரையாடுதல்.
4. ஒவ்வொருவரும் ஏனையோருக்கு…
ஒரு பாடப்பரப்பையாவது கற்பிக்க…
5. பாடங்களுடன் சம்பந்தப்பட்ட த…
ஏற்படுத்தி விவாதம் செய்தல்.
6. தயாரிக்கப்பட்ட விளக்கப் படங்க…
கூடிய குறிப்புகள், பெருப்பிக்கப்ப…
எழுத்தில் எழுதப்பட்ட) சுருக்கக் கு…
சுவர்களில் தொங்க விடுதல்.

## பரீட்சைக்கு முன்…

நொவெம்பர் மாதம் என்பது க.பொ…
சாதாரண தரப் பரீட்சைக்கு கற்கும் ம…
அல்ல. மாறாக அது பரீட்சைக்கு ஆய…
மாகும் மாதமாகும். த…ணைப் பரீட்…
முன்னரும்கூட ஒரு வார காலத்தை …
படிப்பதற்கு செலவிடாமல் பரீட்சை
எழுதுவதற்கு ஆயத்தப்படுத்துவதற்…
செலவிட வேண்டும்.

## பரீட்சை எழுது…

க.பொ.த. சாதாரண தரப் பரீட்…
முன் நடாத்தப்படும் இறுதித் தவ…
பரீட்சை நல்லதோர் ஒத்திகை அ…
அதனால், சாதாரண தரப் பரீட்…
வரும் இறுதித் தவணைப் பரீட்…
தோற்றுங்கள். அது சாதாரண த…
பரீட்சைக்கு மாணவர்களுக்கு ந…
சக்தியைக் கொடுக்கும்.

சாதாரண தரப் பரீட்சைக்கு பொதுவாக, வினாத்தாள் இரு பகுதி களாகப் பிரிக்கப்பட்டே தயாரிக்கப்படும். (விசேட சந்தர்ப்பங்களில் இது மாறுபடக்கூடும்) முதலாவது பகுதியில் பல்தேர்வு வினாக்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (சா /த) பரீட்சையில்
# ...வழிமுறைகள்



ல்
ல் (Revision)
ப் கற்பதன்
ரலையும் உயர்ந்த
தற்காக...
கொண்டே
ாரித்தல்.
ருக்கக்
டக்
ளையும்
குறைந்த பட்சம்
முனைதல்.
லப்புகளை
, படங்களுடன்
ட (பெரிய
றிப்புகளை
.த.
தம்
த்த
சையின்
ாடம்
க,

வது
சைக்கு
ணைப்
கும்.
சக்கு முன்
சைக்குத்
ப்
ல

கொண்ட 40 வினாக்கள் தரப்படும். பல்தேர்வு வினாவொன்றிற்கு 4 தெரிவுகள் (தேர்வுகள்) தரப்படும். மிகவும் சரியான விடையை தெரிவுசெய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் ஒருமுறை மாத்திரம் குறியுங்கள். ஒரு தெரிவை மாத்திரம் தெரிவுசெய்து குறித்தபின் வேறொன்றினைக் குறிப்பதைத் தவிருங்கள்.

ஏதாவதொரு பல்தேர்வு வினாவுக்கு விடை அளிக்க முடியாவிட்டால் அது குறித்து யோசித்துக்கொண்டே நேரத்தைக் கழிக்காமல் அடுத்த பல்தேர்வு வினாவுக்கு விடை அளியுங்கள். முன்பு விடையளிக்க முடியாமல் போன அந்தக் கேள்விக்குரிய பதிலை இறுதியில் அளிக்க முடியும்.

இரண்டாம் பகுதியைக் கொண்ட வினாத்தாளானது, ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்ற விதத்தில் மாறுபட்டுக் காணப்படலாம். கட்டாய வினாக்களும் தெரிவு வினாக்களும் இருக்கும். எந்தெந்த வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என வினாத்தாளின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். அதனால், வினாத்தாளின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு அதற்கமைய விடை எழுத வேண்டும்.



## நேரத்தை முகாமைபிடல்

பரீட்சையில் வெற்றிபெற வேண்டுமாயின் பதில் எழுதுவதற்காக வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்டளவு நேரத்திற்குள் குறிப்பிட்ட கேள்விகளுக்கு சரியான விடை அளிக்க வேண்டும். இதனால், நேரத்தை முகாமைப்படுத்தல் மிகவும் முக்கியமாகும். அந்தவகையில், வினாப்பத்திரத்திற்கு விடை அளிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள காலம் மூன்று மணித்தியாலம் என வைத்துக் கொள்வோம். அதாவது, 180 நிமிடங்கள். பெரும்பாலானோர், பரீட்சை மண்டபத்தில் சிரமமான ஒரு நிலைக்குத் தள்ளப்படுவதற்குக் காரணம் அந்த 180 நிமிடமும் விடையளிப்பதற்குப் பயன்படுத்துவதே ஆகும்.

எனினும், விடை அளிக்கும்போது, மிகவும் சுதந்திரமாக விடை அளிக்க வேண்டும். விடையளிப்பதற்கு செலவிடும் காலம் எவ்வளவு என்பதை முன்கூட்டியே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். 20 நிமிட நேரத்தை விடையளிக்காத மேலதிக நேரமாக ஒதுக்கி வையுங்கள். அதன்படி உங்களுக்கு விடையளிக்க எஞ்சுவது 160 நிமிடங்களாகும்.

100 புள்ளிகள் பெற 160 நிமிடங்கள் செலவழித்தால் ஒரு புள்ளி பெற 1.6 நிமிடங்கள் செலவாகும். இரண்டு புள்ளிகளுக்கு 3.2 நிமிடங்கள் செலவாகும். ஐந்து புள்ளிகளுக்கு 8 நிமிடங்கள்... இவ்விதமாகவே நேரத்தை முகாமைப்படுத்த வேண்டும்.



## தவறான நேரக் கணிப்பீடு

பரீட்சை மண்டபத்தில் பெரும்பாலும் நேரத்தைக் கழப்பிக்கொள்வதே, பெரும்பாலான மாணவர்களின் செயல்பாடாக இருக்கிறது. 1 புள்ளி மாத்திரம் கிடைக்கும் ஒரு விடைக்கு 3 நிமிடங்கள் செலவழிப்பதாக வைத்துக்கொள்வோம். இவ்விதமாக நேரத்தை செலவழித்தால் பாதி வினாக்களுக்கு விடையளிக்கும்போதே, எஞ்சிய வினாக்களுக்கு விடையளிக்க நேரம் போதாத நிலை ஏற்படும்.

இதன் காரணமாக, மன அழுத்தம் ஏற்படும். அதன் விளைவாக தெரிந்த விடைகளைகூட எழுத முடியாத நிலை ஏற்படும். இதன் இறுதி விளைவாக எழுதவேண்டிய சகல வினாக்களுக்கும் முறையாக விடை எழுத முடியாது போகும்.

## அதிக விடயங்களை எழுதுவதால் புள்ளிகள் கிடைக்குமா?

கேட்கப்பட்டுள்ள கேள்விக்கு உட்படாத, மேலதிக விடயங்களை விடையாக எழுதுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். மேலதிகமாக எழுதிய விடயங்கள் முற்றிலும் உண்மை என்றாலும் கேள்விக்கு உரிய விடயமாக அது இல்லாதிருப்பதால் புள்ளிகள் வழங்கப்படமாட்டா. எனவே, கேள்வியில் கேட்கப்பட்டுள்ள விடயங்களுக்கு மாத்திரம் மிகச் சரியாக, தெளிவாக விடை அளியுங்கள்.

## விடை எழுதிய பின்

விடை எழுதிய விடைத்தாள்களை இலக்க வரிசைப்படி கோர்த்துக் கட்டுங்கள். பரீட்சை இலக்கம், பரீட்சார்த்தியின் சுட்டெண், கேள்வி இலக்கம், உப வினா இலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா? என்பதை அவதானியுங்கள்.

## பரீட்சை முடிந்த பின்

ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சை முடிந்தவுடன் வினாத்தாளை ஆவணக்கோப்பில் இட்டு அதற்குரிய புத்தகங்களுடன் வேறொரு இடத்தில் வையுங்கள். மாறாக பரீட்சை முடிந்ததும் மீண்டும் அவ் வினாத்தாளை புரட்டிப்பார்க்கவோ, அதன் குறை நிறைகளை ஆராயவோ, வேண்டாம். அத்தோடு, வினாத்தாள் சம்பந்தமாக மற்றவர்களோடு கலந்துரையாடவும் வேண்டாம். சாதாரண தர பரீட்சையில் இறுதி பாடத்திற்கு தோற்றிய பின், முழுமையாக பரீட்சைகள் முடிந்த பின்பே இது குறித்து கலந்துரையாட வேண்டும்.எனவே, அடுத்த பாடத்திற்குரிய பரீட்சைக்கு ஆயத்தப் படுத்துவதை மாத்திரம் மேற்கொள்ள வேண்டும்.



## மனதை இலகுவாக்கிக் கொள்ளுங்கள்

பாடல்களைக் கேட்பது, நாவல் ஒன்றை வாசிப்பது, கவிதை ஒன்றை எழுதுவது, சித்திரம் வரைவது போன்ற செயல்களின்மூலம் மனதை இலகுவாக்கிக்கொள்ளலாம். இவற்றின்மூலம் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதில் பாதிப்பு எதுவும் ஏற்படாது. மாறாக அது மனநிலையை நல்ல நிலைக்கு கொண்டுவரும்.

## நன்கு நித்திரை கொள்ளுங்கள்

பரீட்சைக் காலத்தில் மட்டுமல்ல பரீட்சைக்கு முற்பட்ட காலத்திலும் கடுமையாக உடலை சிரமப்படுத்துவதும் நித்திரை கொள்ளாமல் விழித்திருப்பதும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். அந்தவகையில் உடல், உள நிலை சீரற்ற நிலையை அடைந்து பாதிப்பினை ஏற்படுத்தும். மனதுடன் சம்பந்தப்பட்ட நரம்புத்தொகுதியானது, நமது உடலின் ஒரு பகுதியாகும். அதன் காரணமாக, உடலின் நிலை சீரற்றுப் போனால் அது நரம்புத்தொகுதிக்கு பாதிப்பினை ஏற்படுத்தும். அதன் விளைவாக, நன்றாகப் பாடங்களைக் கற்றாலும் பாடங்கள் மறந்து போகும் நிலை ஏற்படும்.

அதற்கமைய, இக்காலகட்டத்தில் நாளொன்றிற்கு இரவு நேரம் 6 மணித்தியாலங்கள் நன்றாக நித்திரை கொள்ளுங்கள். இரவு நேரத்தில் நன்றாக நித்திரைகொள்வதால் அடுத்த நாள் புதிய உற்சாகத்துடன் செயற்பட முடியும். நிலவும் இந்த புத்துணர்ச்சியினால் நன்றாகக் கற்றலை மேற்கொள்ள முடியும்.

**க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மிகச் சிறப்பான முறையில் சித்தியடைய உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்**

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சுற்றாடல்

பெயர்: ................................................

★ கீழ்க் காணும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

**01. காற்றினால் பரவும் வித்துக்கள் எவை?**

1. மாம்பழம், வேம்பு 2. குருவிச்சை, பருத்தி
3. சீதேவியார், பருத்தி 4. வேம்பு, பருத்தி

**02. நீரில் அமிழ்ந்து மிதக்கும் தாவரம் எது?**

1. வெற்றிலை 2. நிம்பியா
3. காசித்தும்பை 4. ஐதரில்லா

**03. வரலாற்று சிறப்பு மிக்க வெள்ளரசு மரம் அமைந்துள்ள இடம் யாது?**

1. அனுராதபுரம் 2. பொலன்னறுவை
3. கதிர்காமம் 4. கண்டி

**04. வெடித்துப் பரவும் வித்து எது?**

1. தாமரை 2. காசித்தும்பை
3. தோடை 4. பலா

**05. ஈரூடகவாழி எது?**

1. தவளை 2. நீர்ப்பாம்பு
3. நண்டு 4. மீன்

**06. நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட பகுதி எவ்வாறு அழைக்கப்படும்?**

1. குடா 2. கண்டம் 3. நாடு 4. தீவு

**07. இலங்கையின் மிகவும் நீளமான நதி எது?**

1. வளவே கங்கை 2. மகாவலி கங்கை
3. களு கங்கை 4. களனி கங்கை

**08. ஆறு கால்களை உடைய உயிரினம் எது?**

1. நுளம்பு 2. சிலந்தி
3. அட்டை 4. அரணை

**09. விவசாயியின் நண்பன்;**

1. எருது 2. வெருளி 3. கிளி 4. மண்புழு

**10. சூழல் மாசடைதலைக் குறைக்கும் பிராணி எது?**

1. காகம் 2. நாய் 3. பூனை 4. எலி

**11. சூரிய ஒளியின் மூலம் உடலுக்குக் கிடைக்கும் விற்றமின்;**

1. A 2. B 3. C 4. D

**12. தண்டுத் துண்டை நடுவதன்மூலம் கன்றைப் பெறும் தாவரம் பின்வருவனவற்றுள் எது?**

1. மரவள்ளி 2. போஞ்சி
3. மிளகாய் 4. பீட்ரூட்

**13. கண்டியில் காணப்படாத பிரசித்தி பெற்ற இடம்;**

1. தாமரைத் தடாகம் 2. பேராதனைப் பூங்கா
3. தலதா மாளிகை 4. கண்டி நூதனசாலை

**14. வருடம்தோறும் மார்ச் மாதம் அனுஷ்டிக்கப்படும் தினம் எது?**

1. சர்வதேச பெண்கள் தினம் 2. சிறுவர் தினம்
3. வயோதிபர் தினம் 4. ஆசிரியர் தினம்

**15. கால் விரலிடையே மென்சவ்வைக் கொண்டிருக்கும் பிராணி எது?**

1. வாத்து 2. கோழி 3. கொக்கு 4. கிளி

**16. பின்வருவனவற்றுள் மிக விரைவில் பழுதடையக்கூடிய உணவுப் பொருள்;**

1. தேன் 2. பிட்டு 3. சோறு 4. மீன்

**17. தாவர - விலங்குணவு சோடி எது?**

1. பாண் - கடலை 2. கீரை- பயறு
3. இறைச்சி- முட்டை 4. சோறு - பால்

**18. மேசன் வேலை செய்வோர் பயன்படுத்தும் உபகரணம் எது?**

1. நீர்மட்டம் 2. மூலைமட்டம்
3. சீவுளி 4. சுத்தியல்

**19. பயிர்ச்செய்கைக்கு ஏற்ற மண் யாது?**

1. களிமண் 2. மணல் மண்
3. இருவாட்டி மண் 4. அடையல் மண்

**20. சித்திரை மாதத்தில் பூக்கும் பூ எது?**

1. வில்வம் பூ 2. அகத்திப் பூ
3. மா 4. முள்முருக்கம் பூ

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

## கணிதம்

(நொவெம்பர் 22 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 05. 2 | 09. 1 | 13. 250 |
| 02. 3 | 06. 1 | 10. 2 | 14. 6500g/ 6.5kg |
| 03. 2 | 07. 3 | 11. ரூபா 20 | |
| 04. 1 | 08. 1 | 12. 2cm | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பிரதமர்கள் - ஜனாதிபதிகள்



இலங்கையின் முதலாவது பிரதமர் (1948-1952)
டி.எஸ்.சேனநாயக்க
(D.S.Senanayake)



இலங்கையின் 2ஆம், 6ஆம், 8ஆம் பிரதமர் (1952-1953), (1960), (1965-1970)
டட்லி சேனநாயக்க
(Dudley Senanayake)



3ஆம் பிரதமர்
(1953-1956)
சேர் ஜோன் கொத்தலாவல
(sir John Kothalawala)



4 ஆம் பிரதமர்
(1956-1959)
எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க
(S.W.R.D.Bandaranayaka)



5 ஆம் பிரதமர்
(1959-1960)
விஜயானந்த தஹநாயக்க
(Wijayananda Dahanayaka)



7 ஆம், 8ஆம், 15 ஆம் பிரதமர் (1960-1965), (1970-1977)
சிறிமாவோ பண்டாரநாயக்க
(Sirimavo Bandaranayake)



முதலாவது ஜனாதிபதி
(1972-1978)
வில்லியம் கொப்பலாவ
(Willam Goppallawa)



முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி
(1978-1989)
ஜே.ஆர்.ஜயவர்தன
(J.R.Jayawardane)



11 ஆம் பிரதமர் மற்றும் 2 ஆம் நிறைவேற்று ஜனாதிபதி
(1978-1989)
ஆர்.பிரேமதாச
(R.Premadasa)



12 ஆம் பிரதமர் மற்றும் 3 ஆவது நிறைவேற்று ஜனாதிபதி
(1989-1993)
டி.பி.விஜயதுங்க
(D.B.Wijethunga)



14 ஆம் பிரதமர் மற்றும் 4 ஆம் நிறைவேற்று ஜனாதிபதி
(1994-1995)
சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க
(Chandrika Bandaranayake Kumarathunge)



16ஆம், 19 ஆம் பிரதமர்
(2001-2005), (2005-2010)
ரத்னசிறி விக்கிரமநாயக்க
(Ratnasiri Wickramanayake)



20 ஆம் பிரதமர்
(2005-2015)
டி.எம்.ஜயரத்ன
(D.M.Jayaratna)



18ஆம் பிரதமர் மற்றும் 5 ஆம் நிறைவேற்று ஜனாதிபதி
(2004-2005), (2005-2015)
மஹிந்த ராஜபக்ஷ
(Mahinda Rajapaksha)



13ஆம், 17 ஆம் பிரதமர்
(1993-1994, (2001-2004)
21 ஆம் பிரதமர்
ரணில் விக்கிரமசிங்ஹ
(Ranil Wickramasinghe)



6ஆவது நிறைவேற்று ஜனாதிபதி
மைத்திரிபால சிறிசேன
(Maithripala Sirisena)

---

விஜய் + தூவானம் இணைந்து வழங்கும்

## பரிசுப் போட்டி

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள → அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

**Thoovaanam SMS செயற்படுத்தும் முறை**

F Thoovaanam

என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

(இச்சேவை முற்றிலும் இலவசம்)

**அனுப்ப வேண்டிய முகவரி :**

3 பரிசில்கள்
29.11.2017
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

இவ்வார கூப்பன் - 29.11.2017
விடை : ..............................
பெயர் : ..............................
முகவரி : ....................
தொ.பே.இல: ............................
பாடசாலை : ............................
..............................
கையொப்பம்

3 பரிசில்கள் போட்டி - 08.11.2017
விடை: sriface com
வெற்றியாளர்:
இஹ்லாஸ் தைஸர்,
214/H/2,புஸ்ஸல்ல,
பரகடுவ

3 பரிசில்கள் போட்டி - 15.11.2017
விடை: குறிஞ்சிப் பூ
வெற்றியாளர்:
வி.கனிஷ்டா,
6C, ஆரியபுர,
பொகவந்தலாவ

Gift sponsored by: www.srijob.com







How to ask Questions + Answers in English

ஆங்கிலத்தில் கேள்வி கேட்கும் மற்றும் பதிலளிக்கும் முறைமை அடங்கிய E-Book

ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருள்



Rs. 8,000 பரிசில்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் ஆக்கங்கள்



## இப்படி இருங்கள்

சாப்பிட்டால் - நிதானத்துடன் சாப்பிடுங்கள்
பேசினால் - அன்போடு பேசுங்கள்
சிந்தித்தால் - ஆழ்ந்து சிந்தியுங்கள்
சிரித்தால் - வாயடக்கிச் சிரியுங்கள்
குளித்தால் - பாதுகாப்புடன் குளியுங்கள்
வேலை செய்தால் - மன நிறைவுடன் செய்யுங்கள்

கா.மு. சாமில்,
தரம்-10,
தி/மூதூர் மத்திய கல்லூரி,
மூதூர்.



## வண்ண நிலவே நீ வருவாயா?

இருள் வானின் வட்ட நிலவே
பெண்முகம் போன்ற வடிவழகே
சிறுவர் விரும்பும் எழில் நிலவே
சீக்கிரமாக நீ வருவாயா?

கறுப்பு அடையில் பதித்த
வெள்ளை ரத்தினமே
கண்சிமிட்டும் விண்மீன்கள் நடுவே
அழகாய் ஒளிரும் அழகிய
நிலவே! நீ வருவாயா?
வந்தே... ஒளி நீ தருவாயா?

ஏ.கே.சினேகா,
தரம்-9B,
கே/தெஹி அல்-அகீல்
ம.ம.வித்தியாலயம்,
கேகாலை.

## துறவியும் திருடனும்

துறவி ஒருவர் மலைப்பாங்கான பகுதியில் குதிரையில் சென்று கொண்டிருந்தார். சற்றுத் தொலைவில் ஒருவன் மயங்கி விழுந்திருந்ததைக் கண்ட அவர், குதிரையை நிறுத்திவிட்டு அவனருகில் சென்று



அசைத்துப் பார்த்தார். மிகவும் களைத்துப் போயிருந்ததுபோல காட்சியளித்த அவன் 'தண்ணீர் தண்ணீர்' என்று அலறிக்கொண்டிருந்தான்.

அவன் மேல் இரக்கப்பட்ட துறவி சற்று தொலைவில் இருந்த நதிக்குச் சென்று தண்ணீர் எடுத்து வந்தபோது அங்கே அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கே மயங்கி விழுந்திருந்த அந்த மனிதனையும் காணவில்லை, அவரது குதிரையையும் காணவில்லை. திருடனான அவன் தன்னை நன்கு ஏமாற்றி குதிரையைத் திருடிவிட்டான் என்பது அப்போதுதான் துறவிக்குப் புரிந்தது.

சில நாட்களின் பின்னர் சந்தையொன்றில் அந்தத் திருடனை கையும் களவுமாகப் பிடித்துக்கொண்டார் துறவி. அவரிடமிருந்து களவாடிய குதிரையை அத்திருடன் விற்க வந்தபோதே, வசமாக மாட்டிக்கொண்டான். அவனருகில் சென்ற துறவி "எங்கும் அசையாதே அப்படியே நில்" என்றார். திருடன் மிரண்டு "எது? என்ன?" என தடுமாறினான்.

அப்போது துறவி " குதிரையை நீயே வைத்துக்கொள். ஆனால், திருடியதை யாரிடமும் சொல்லாதே. மக்களுக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்தது தெரிய வந்தால் எதிர்காலத்தில் உண்மையிலேயே சாலையில் யாராவது மயங்கி இருந்தால்கூட உதவ முன்வர மாட்டார்கள். தீயவன் நீ ஒருவன் தவறு செய்ய, நல்லவர்கள் பலருக்கு காலா காலத்திற்கு உதவி கிடைக்காமல் உயிர் போகக்கூடும்" என்றார். இதைக் கேட்ட திருடனின் கண்களில் கண்ணீர் வழிந்தது. அவன் மனமாற்றம் அடைந்து துறவியின் கால்களில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினான்.

எம்.அஸ்மிஸாலிஹ்,
தரம்-9B,
மட்/ஏறாவூர் அறபா வித்தியாலயம்,
மட்டக்களப்பு.

## மரங்களின் பயன்கள்



நாம் ஒரு செடியை நாட்டினால் சில வருடங்கள் கழித்து அது மரமாகி விடுகின்றது. அதில் வரும் கனிகளை நாம் உண்டு மகிழ்கின்றோம். மரங்களை வெட்டுபவர்கள் மரங்களை வெட்டித் தளபாடங்களைச் செய்கிறார்கள். வழிப்போக்கர்கள் மரத்தின் நிழலில் அமர்ந்து ஓய்வு எடுக்கிறார்கள். சிலர் கனிகளைப் பறித்து உண்கிறார்கள்.



பண்டைய காலத்து மக்கள் மரங்களில் உள்ள காய்ந்த கிளைகளை தீ மூட்டி எரித்து தகவல்களைப் பரிமாறினார்கள். எமது சூழலில் மரங்கள் உள்ளதால் சூழல் அழகு பெறுகிறது. அவை எமக்கு சுவாசிக்க சுத்தமான காற்றைத் தருகின்றன.

மரங்கள் எமக்கு மருந்தாகும் பொருட்களைத் தருகின்றன. மழைவீழ்ச்சிக்கு மரங்கள் உறுதுணை புரிகின்றன. வளியில் ஒட்சிசன் அதிகரிப்புக்கு வழிசெய்கின்றன.

எம்.ஆர்.நஹ்லா,
தரம்-04,
க/தெனு/யஹுலதன்னை
மு.ம.வித்தியாலயம்,
யஹலதன்னை.

## மலையகம்



மலையகம் மாயம் அல்ல
அது ஒரு
நந்தவனம்...!


மலையகமே நீ மண்ணோடு
மண் ஆகிடாதே....,
அந்த மலைபோல்
உயர்ந்திடு
உன்னையே நீ உயர்த்திடு...!

நண்பா...!
மண்ணைத் தோண்டி
புதையல் எடுக்காதே
உன்னைத் தோண்டி
புதையல் எடு...!

நண்பனே!
பணக்காரர்களின்
தேனீர்
மலையக மக்களின்
இரத்தம்...!

கனிஸ்டன்,
தரம்-07,
க.தெல் நாவலர் தமிழ் வித்தியாலயம்,
ரங்கல.

## வீதி ஒழுங்கைப் பேணுவோம்



வீதி எமக்கு ஒரு பொதுச் சொத்தாகும். அதனை உரிய முறையில் பாதுகாக்க வேண்டும். வீதியில் ஒழுங்கு முறையாக நடந்துசெல்ல வேண்டும். வீதியில் குப்பைகூளங்கள் கொட்டுவதை தவிர்க்க வேண்டும். வீதியில் கற்கள், மட்டைகள், சிரட்டைகள் போடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். வீதியை சுத்தமாக வைத்திருப்பது எம் அனைவரின் கடமையுயாகும். சிறுவர்களை வீதிகளில் விளையாட விடுவதால் சில விபத்துக்கள் ஏற்படலாம்.


நாம் தினமும் பயணிக்கும் பாதையில் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனால், வாகன ஓட்டுனர்கள் சட்டதிட்டங்களை கடைப்பிடிக்க வேண்டும். நாம் எல்லோரும் மஞ்சள் கோட்டுக் கடவையால் கடக்க வேண்டும். பாதசாரிகள் வலது பக்கமாக வீதியில் நடந்து செல்ல வேண்டும். வீதி சட்டதிட்டங்களை மதித்து நடத்தல் வேண்டும். தொலைபேசியில் உரையாடியபடி வீதியை கடத்தலை தவிர்க்க வேண்டும். அதற்கமைய, வீதி ஒழுங்குகளைப் பேணுவோம் விபத்துக்களைத் தவிர்த்திடுவோம்.

சாபித்,
அசனார் வீதி.
பொத்துவில்-17.

நீங்களும் ஆக்கங்களை அனுப்பலாம்
முகவரி
மாணவர் ஆக்கங்கள்,
'விஜய்'
த.பெ.இல 2037,
கொழும்பு

noolaham.org | aavanaham.org

# குழம்பியிருக்கும் பகுதிகளை ஒழுங்கமைத்து சரியான சொல்லைப் பெறுக




## இலக்கங்களை முறையே இணைத்து படத்தைப் பூர்த்தி செய்வோம்





## பாகங்களைக் குறிப்போம்



| | | | | |
|---|---|---|---|---|
| பாதம் | கால் | காது | வாய் | விரல் |
| தலை | மூக்கு | கை | கண் | கன்னம் |

## படத்தைப் பூரணப்படுத்துங்கள்



-நுஸ்ஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி



பசு



குதிரை



நாய்



வாத்து



பூனை



ஆடு



சேவல்



*01.* இங்கிருப்பவற்றில் பால் தரும் விலங்குகள் எவை?

..........................................

*02.* பறவைகளைக் குறிப்பிடுக.

..........................................

*03.* வளர்ப்பு விலங்குகள் யாவை?

..........................................

*04.* தாவர உணவுகளை மட்டும் உண்ணும் விலங்குகள் எவை?

..........................................





## பொருத்தமான உரையாடல்களை உரிய கட்டங்களில் எழுதுக


* ஐயையோ! நான் என்ன செய்வது? இவை என்னையும் சாப்பிட்டுவிடும் போல் இருக்கே.
* அதோ பாரு ஜெனி, நிறையப் புறாக்கள் வருகின்றன.
* ஹேய் புறா குஞ்சே! வா.. வா... இந்தா சாப்பிடு.
* ஹா... ஹா... மீனு, நல்லா மாட்டிக்கொண்டாயா? இனித் தப்புவது கஷ்டம்தான்.
* மீனு! இந்த புறாவுக்கு கொஞ்சம் சாப்பாடு போடு.



**01.** மரங்களை இணைத்து எதற்காக கொடிகள் கட்டப்பட்டுள்ளன?

..........................................





**02.** ஆடைகளை உலர்த்திக்கொள்வதற்கு பிரதானமாக தேவைப்படுவது யாது?

..........................................

**03.** காற்சட்டைகள் உள்ள கொடியில் எத்தனை டீ-ஷேர்ட்கள் உள்ளன?

..........................................

**04.** கொடிக்கு கீழாக கழற்றி வைக்கப்பட்டிருப்பது யாது ?

..........................................

*01.* இந்த இடம் குறிப்பது;

1. கடற்கரை
2. சிறுவர் விளையாட்டுப் பூங்கா
3. தெருவோரம்

*02.* இங்கு சிறுவர்கள் என்ன செய்கின்றனர்?

1. படிக்கின்றனர்
2. உணவு உட்கொள்கின்றனர்
3. விளையாடுகின்றனர்

*03.* ஊஞ்சலுக்கு மேலாகப் பறந்துகொண்டிருப்பது யாது?

1. விமானம் 2. பட்டம் 3. பறவை


*04.* இங்கு எத்தனை பந்துகள் காணப்படுகின்றன?

1. மூன்று 2. இரண்டு 3. நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி: 268



### மேலிருந்து கீழ்

1. கிளை.
2. திருவிழா. (குழம்பியுள்ளது)
3. நெகிழ்ச்சி. (குழம்பியுள்ளது)
4. தானிய வகையொன்று. (குழம்பியுள்ளது)
5. எழுதுகோல்.
7. எவர். (தலைகீழ்)
8. குலம். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்


1. குதிரைக்கு இல்லாதது.
2. எஃகு. (குழம்பியுள்ளது)
3. வயிற்றுப் பொருமல். (குழம்பியுள்ளது)
4. உரிய காலம்.
5. நபர். (மாறியுள்ளது)
6. மக்கள். (குழம்பியுள்ளது)
7. கரி.

## குறுக்கெழுத்துப் போட்டி: 267


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மூ | தா | தை | ய | ர் | |
| லை | 2 மா | | க் | தே 3 | கு |
| | | | க | | |
| 4 க | ட் | டு | 5 ம | ர | ம் |
| தி | | 6 ஆ | ம் | | ல |
| 7 போ | லி | | | வு | 8 ஏ |




இங்குள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி குறைந்தது 10 சொற்களையேனும் எழுதுக





## ஒத்த உச்சரிப்புகளை உடைய சொல்லில் வட்டமிடுக





படத் தரவுகளுக்கமைய பென்சில்களின் நிறங்களை உரிய கட்டங்களில் எழுதி பூர்த்தி செய்க


orange brown black red
blue yellow purple gray
pink white green




## விடை தருக



## அறிவுக்கு விருந்து (15.11.2017) விடைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த வருட க.பொ.த. (சா/தர) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஊவா மாகாணத்தைச் சேர்ந்த தமிழ், சிங்கள மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு வழிகாட்டலாக திகழ்ந்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பாராட்டும் விழாவொன்று அண்மையில் பதுளை நூலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது, ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் அவர்களால் சித்திபெற்ற 276 மாணவர்களுக்கு கணினிகள், பதக்கங்கள், சான்றிதழ்கள் ஆகியன வழங்கப்பட்டன.

## விஜய் விழா உலா

த.பெ.எண் 2037
கொழும்பு



அண்மையில் நடைபெற்ற இலங்கை தேசிய கராத்தே சுற்றுப்போட்டியில் மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரியைச் சேர்ந்த அத்லான் நௌஷாட் மற்றும் அய்யாஷ் அனஸ் ஆகிய மாணவர்கள் 11 வயது ஆண்களுக்கான 'குமித்தே கராத்தே' போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்று அகில இலங்கை ரீதியில் செம்பியனாக தெரிவு செய்யப்பட்டனர். ஸாஹிரா கராத்தே சங்கத்தின் பொறுப்பாசிரியர் எம்.சட்.எம்.ஸம்னி மற்றும் பயிற்றுவிப்பாளர் சிஹான் பிரியந்த பெரேரா ஆகியோரின் நெறிப்படுத்தல்கள் இந்த வெற்றிக்கு உறுதுணை புரிந்தமையும் குறிப்பிடத்தக்கது.



பதுளை வித்தியாலய ஒழுங்கையைச் சேர்ந்த அஸ்வர்-இன்ஷிரா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா இமானா, தனது இரண்டாவது பிறந்தநாளை 10.11.2017 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: அதீப்)



கீட்டுகஸ்தோட்டை - இனிகலை பாடசாலை வீதியைச் சேர்ந்த அப்துல் ஹலீம் ஹாத்திம் அஹமட், தனது நான்காவது பிறந்தநாளை 17.11.2017 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: கே.ஏ.அலீம்)



கீட்டுகஸ்தோட்டை - இனிகலை பாடசாலை வீதியைச் சேர்ந்த அப்துல் ஹலீம் ஹாதி அஹமட், தனது இரண்டாவது பிறந்தநாளை 30.11.2017 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: கே.ஏ.அலீம்)



மை.அனுஜா,
ஹைபொரஸ்ட் இல.03 தமிழ் வித்தியாலயம்,
கந்தப்பளை.





அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.சஜீத்,
சாஹிரா கல்லூரி, மாத்தளை.



எம்.அஸ்வாக்,
கம்பளை சாஹிரா கல்லூரி, இலங்கம்வத்தை.



ச.கிஷோபிகா,
சென் மேரிஸ் கல்லூரி, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



**பெயர்:** எம்.இல்தாப்.
**புள்ளிகள்:** 159.
**பாடசாலை:** கே/மாவ/நூராணியா முஸ்லிம் மகா வித்தியாலயம், உயன்வத்த.
**பெற்றோர்:** எம்.முகர்ரம்-எஃப்.நிரோஷா.



**பெயர்:** எம்.ஆகில்.
**புள்ளிகள்:** 159.
**பாடசாலை:** ப/வெளிமடை முஸ்லிம் மகா வித்தியாலயம், வெளிமடை.



**பெயர்:** எஃப்.மாஜிதா.
**புள்ளிகள்:** 171.
**பாடசாலை:** மாறை/அல்-ஹுதா முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம், ஹொரகொட.
**பெற்றோர்:** எம்.நாளிர்-எஃப்.றஸானா.



**பெயர்:** எம்.சாஜீத்.
**புள்ளிகள்:** 163.
**பாடசாலை:** தி/கிண்/அல்-அக்ஷா ஆரம்பப் பாடசாலை, கிண்ணியா.



**பெயர்:** எஃப்.நாதியா.
**புள்ளிகள்:** 160.
**பாடசாலை:** பிலி/அறபாத் முஸ்லிம் மகா வித்தியாலயம், எகொட உயன.



**பெயர்:** ம.சியாமளா வர்தனா.
**புள்ளிகள்:** 154.
**பாடசாலை:** பது/கனவரல்ல இல.02 தமிழ் வித்தியாலயம்.



மமா/தெல்/நாவலர் தமிழ் வித்தியாலய மாணவரான எம்.சபாஸ், 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பாடசாலை அதிபர் எஸ்.பாலசுப்ரமணியம் மற்றும் வகுப்பாசிரியர் பீ.பாஸ்கரன் ஆகியோருடன் காணப்படுகின்றார்.

பது/இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலய மாணவியான பீ.வினோதினி 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தனது வகுப்பாசிரியர் டி.செல்வக்குமாரியுடன் காணப்படுகின்றார்.

(தகவல்: ந.மலர்வேந்தன்)



உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு




ආයුබෝවන්
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் சம்பத், அனில் ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

සම්පත්: ආ.. අනිල්, හුඟ දවසකට පස්සේ හමුවුණේ. කොහොමද සැප සනීප?
ஆ... அனில், ஹுங்க தவஸகட்ட பஸ்ஸே ஹமுவுனே. கொஹொமத செப சனீப?
சம்பத்: **ஆ... அனில், நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திக்கின்றோம். எப்படி சுகம்?**

අනිල්: ඔව් සම්පත්, හුඟ දවසකින්. මම සනීපෙන් ඉන්නවා.
ஒவ் சம்பத், ஹுங்க தவஸகின். மம சனீபென் இன்னவா.
அனில்: **ஆம் சம்பத், நீண்ட நாட்களுக்குப் பிறகு. நான் சுகமாக இருக்கிறேன்.**

සම්පත්: ඔයා කොහේද යන්නේ?
ஒயா கொஹேத யன்னே?
சம்பத்: **நீங்கள் எங்கே போகிறீர்கள்?**

අනිල්: මම වැඩට යනවා සම්පත්.
மம வெடட்ட யனவா சம்பத்.
அனில்: **நான் வேலைக்குப் போகிறேன் சம்பத்.**

සම්පත්: ඔයා කොහේද වැඩ කරන්නේ?
ஒயா கொஹேத வெட கறன்னே?
சம்பத்: **நீங்கள் எங்கே வேலை செய்கிறீர்கள்?**

අනිල්: මම අධ්‍යාපන අමාත්‍යංශයේ වැඩ කරනවා.
மம அத்யாபன அமாத்யங்ஷயே வெட கரனவா.
அனில்: **நான் கல்வி அமைச்சில் வேலை செய்கிறேன்.**

සම්පත්: ඔයා එහේ මොනවද කරන්නේ?
ஒயா எஹே மொனவத கறன்னே?
சம்பத்: **நீங்கள் அங்கே என்ன செய்கிறீர்கள்?**

අනිල්: මම භාෂා පරිවර්තක ලෙස සේවය කරනවා.
மம பாஷா பரிவர்த்தக லெச சேவய கறனவா.
அனில்: **நான் மொழிபெயர்ப்பாளராக வேலை செய்கிறேன்.**

සම්පත්: හරි හොඳයිනේ. ඔයා පොඩි කාලේ ඉඳල දෙමළත් හොඳට ඉගෙන ගත්තනේ.
ஹரி ஹொந்தய்னே. ஒயா பொடி காலே இந்தல தெமளத் ஹொந்தட்ட இகென கத்தனே.
சம்பத்: **மிகவும் நல்லதே. நீங்கள் சின்ன வயதில் இருந்தே தமிழும் நன்றாகப் படித்தீர்கள் அல்லவா?**

අනිල්: ඔව්... දෙමළ භාෂාව නිසා තමයි මට මේ රැකියාව ලැබුණේ.
ஒவ்... தெமள பாஷாவ நிசா தமய் மட்ட மே ரெகியாவ லெபுனே.
அனில்: **ஆம்... தமிழ் மொழியினால்தான் எனக்கு இந்த வேலை கிடைத்தது.**

සම්පත්: ඒක නම් ඇත්ත. ඕනෑම භාෂාවක් ඉගෙන ගන්න එක හරිම හොඳයිනේ.
ஏக்க நம் எத்த. ஓனேம பாஷாவக் இகென கன்ன எக ஹரிம ஹொந்தய்னே.
சம்பத்: **அதென்றால் உண்மை. எந்தவொரு மொழியையும் கற்றுக்கொள்வது மிகவும் நல்லதுதானே.**




## இறந்தகால தனி வாக்கியம் மற்றும் எதிர்கால தனி வாக்கியம்

**மேற்காணும் இரு வகை வாக்கியங்களினதும் 'வினா' நிலையில் உள்ள வாக்கியங்களை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.**

அ) Did he draw a new picture yesterday?
அவன் நேற்று ஒரு புதிய படம் வரைந்தானா?
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஆ) Will he draw a new picture tomorrow?
அவன் நாளை ஒரு புதிய படம் வரைவானா?
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ Did he draw? (Past tense)
அவன் வரைந்தானா? (இறந்தகாலம்)

★ Will he draw? (Future tense)
அவன் வரைவானா? (எதிர்காலம்)

★—★—★—★

இ) Did she write a letter yesterday?
அவள் நேற்று ஒரு கடிதம் எழுதினாளா?
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஈ) Will she write a letter tomorrow?
அவள் நாளை ஒரு கடிதம் எழுதுவாளா?
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ Did she write? (Past tense)
அவள் எழுதினாளா? (இறந்தகாலம்)

★ Will she write? (Future tense)
அவள் எழுதுவாளா? (எதிர்காலம்)

★—★—★—★

உ) Did it run into the garden yesterday?
அது நேற்று தோட்டத்துக்குள் ஓடியதா?
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஊ) Will it run into the garden tomorrow?
அது நாளை தோட்டத்துக்குள் ஓடுமா?
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ Did it run? (Past tense)
அது ஓடியதா? (இறந்தகாலம்)

★ Will it run? (Future tense)
அது ஓடுமா? (எதிர்காலம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த சார்க் போட்டிகள் இலங்கையில் நடைபெறும்

2020 ஆம் ஆண்டில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் (சார்க்) இலங்கையில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், பூட்டான், மாலைதீவு ஆகிய 8 தெற்காசிய நாடுகள் கலந்துகொள்கின்ற மேற்படி




'சார்க்' போட்டிகள் இறுதியாக 2016 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அடுத்த 'சார்க்' போட்டிகள் 2018 ஆம் ஆண்டில் நேபாளத்திலேயே நடைபெறவிருந்தது. எனினும், இப்போட்டிகளை உரிய காலத்தில் நேபாளத்தினால் நடத்த முடியாதிருப்பதனால், இப்போட்டிகளை 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.




# 2023 உலகக் கிண்ண றக்பி பிரான்ஸில்

2023 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண றக்பி போட்டிகளை நடத்தும் உரிமையை பிரான்ஸ் பெற்றுள்ளது. மேற்படி போட்டியை நடத்துவதற்கான அனுமதி கோரலில் தென்னாபிரிக்கா, அயர்லாந்து ஆகிய நாடுகளும் போட்டியிட்டிருந்தன.



அந்நாடுகளை தோற்கடித்தே, பிரான்ஸ் இந்த அனுமதியைப் பெற்றுள்ளது.

கடந்த வாரம் றக்பி சம்மேளனம் நடத்திய இறுதிச் சுற்றுப் பேச்சுக்களின்போதே, இது குறித்த தீர்மானம் அறிவிக்கப்பட்டது. இதற்கு முன்னர் 2007 ஆம் ஆண்டிலும் உலகக் கிண்ண றக்பி போட்டிகளை பிரான்ஸ் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திர தினத்தையொட்டி இலங்கையில் T20 போட்டித் தொடர்

இம்முறை இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை சிறப்பிக்கும்முகமாக மும்முனை T20 கிரிக்கெட் போட்டித் தொடரொன்று நடைபெறவுள்ளது.




இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் கலந்துகொள்ளவுள்ள இந்த மும்முனை தொடர் மார்ச் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறும். இதன்படி, மொத்தமாக 7 போட்டிகள் நடைபெறவுள்ளது. இதில் ஒவ்வொரு அணியும் ஏனைய அணியுடன் இரண்டு தடவைகள் மோதும். கிடைக்கின்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன.

# றொனால்டோ Vs மெஸ்ஸி சிறந்த வீரருக்கான விருது யாருக்கு?

வருடத்தின் சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான 'பெலூன் டி ஓர்' விருது இம்முறை போர்த்துக்கல் வீரர் றொனால்டோவுக்கா அல்லது ஆர்ஜன்டீன வீரர் லயனல் மெஸ்ஸிக்கா கிடைக்கவுள்ளது என்பதே இன்று




பரபரப்பான விடயமாக அமைந்துள்ளது.

இம்முறை சிறந்த கால்பந்தாட்ட வீரராக தானே தெரிவுசெய்யப்படவுள்ளதாக றொனால்டோ தொலைபேசி வழியே மெஸ்ஸியிடம் தெரிவித்ததாக தகவலொன்று தெரிவிக்கின்றது. எனினும், இத் தெரிவுப் போட்டியை நடத்துகின்ற 'பிரான்ஸ் ஃபுட்போல்' என்ற சஞ்சிகையின் அட்டைப் படத்தில் இம்முறை மெஸ்ஸியின் படமே இடம்பெற்றுள்ளதால் அநேகமாக, மெஸ்ஸியே சிறந்த வீரராக தெரிவாவார் எனவும் சிலர் ஊகிக்கின்றனர். எனினும், டிசம்பர் 7 ஆம் திகதி இந்தக் கேள்விகளுக்கான பதில் தெரிந்துவிடும். அன்றைய தினமே வருடத்தின் சிறந்த கால்பந்தாட்ட வீரர் யார் என்பது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

# தவறான விசாரணை மனதைப் பாதித்தது சைக்கிளோட்ட வீரர்

பிரிட்டனின் சைக்கிளோட்ட சம்மேளனம் தன்னைப் பற்றி மேற்கொண்ட தவறான விசாரணைகளின் காரணமாக, தனது வாழ்க்கையில் மோசமான ஒரு காலகட்டத்தை அனுபவிக்க வேண்டிய நிலைக்கு தான் தள்ளப்பட்டதாக சர் பிரெட்லீ பிஜின்ஸ் என்ற சைக்கிளோட்ட வீரர் தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டியின்போது, தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தை உட்கொண்டார் என்ற குற்றச்சாட்டிற்கு இவர் ஆளாகியிருந்தார். எனினும், 2012 ஆம் ஆண்டில் இந்த குற்றச்சாட்டிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். அதன்பின்னர் 5 ஒலிம்பிக் பதக்கங்களை வெற்றிகொண்டதன் பின்னர் 2016 இல் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றார். இருப்பினும், பழைய ஞாபகங்கள் இன்னமும் தனது மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர்ப்பல்வகைமை

எமது இயற்கை சூழலில் தாவரங்கள், விலங்குகள், நிலப்பகுதிகள் போன்ற அனைத்தும் உள்ளடங்குகின்றன. இவற்றை நன்கு அவதானிக்கும்போது, அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் அவற்றினால் கிடைக்கும் பயன்கள் குறித்தும் எம்மால் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இந்த இயற்கை சூழலில் அங்கம் வகிக்கின்ற அனைத்தையும் உள்ளடக்கியதாகவே 'உயிர்ப்பல்வகைமை' காணப்படுகின்றது.

## உயிர்ப்பல்வகைமை என்றால்...

'உயிர்ப்பல்வகைமை' என்பது, பூமியில் வாழும் பல்வேறு உயிரினங்களைக் குறிப்பதாக உள்ளது. தாவரங்கள், விலங்குகள், நுண்ணங்கிகள் உட்பட; அவை வாழ்கின்ற சூழல் தொகுதிகளும் இதில் அடங்குகின்றன.

## இலங்கையில் உயிர்ப்பல்வகைமை மாற்றமடைதல்

பண்டைய காலத்தில் இலங்கையில் தனித்துவமான உயிர்ப்பல்வகைமை நிலவிவந்தபோதிலும், பிற்காலத்தில் இலங்கை முகங்கொடுத்த வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் காரணமாக இங்கிருந்த தாவரங்கள், விலங்குகள் மற்றும் சூழல் தொகுதிகளில் பல்வேறு பாதிப்புகளும் மாற்றங்களும் ஏற்பட்டன.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புக் காலத்தில் இலங்கையின் உயிர்ப்பல்வகைமைத்துவத்தில் பாரிய அழிவுகள் ஏற்பட்டன.
கோப்பி, றப்பர், தேயிலை, கறுவா ஆகிய தோட்டப் பயிர்களுக்கான வெளிநாட்டு கேள்வி காரணமாக, பாரியளவு நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. இதனால், இயற்கை சுற்றாடல் தொகுதி பெரும் மாற்றங்களை எதிர்கொண்டது. வெளிநாட்டவர்களின் தேவைகளுக்கு ஏற்ப யானைத் தந்தங்களைப் பெறுவதற்காக பெருமளவிலான யானைகள் கொல்லப்பட்டன. அபிவிருத்தி என்ற பெயரில் இலங்கை முழுவதும் முன்னெடுக்கப்பட்ட பெருந்தெருக்கள், நீர்ப்பாசன திட்டங்களுக்காக பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டன. இதனால் நாட்டின் இயற்கை வளங்களுக்கு பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன.


## உயிர்ப்பல்வகைமை அழிவினால் எதிர்கொண்டுள்ள பாதிப்புகள்

1881 ஆம் ஆண்டளவில் இலங்கையில் காணப்பட்ட மொத்த வனாந்தரங்களின் அளவு மொத்த நிலப்பரப்பில் 84 சதவீதமாகும். 1902 ஆம் ஆண்டில் இந்த அளவு 71 ஆகக் குறைந்தது. 1992ஆம் ஆண்டு கணிப்பின்படி, இலங்கையின் மொத்த வனாந்தரங்களின் அளவு 32 சதவீதமாகக் குறைந்துள்ளது. 2001 ஆம் ஆண்டாகும்போது இலங்கையிலுள்ள வனாந்தரங்களின் அளவு 23 சதவீதமாகக் காணப்பட்டுள்ளது. தற்போதளவில் இந்த அளவு மிக வேகமாகக் குறைவடைந்து வருகின்றது.

வனாந்தரங்களின் அழிவுகள் காரணமாக, இலங்கையின் இயற்கை உயிர்ப்பல்வகைமை பாரிய அழிவுகளை எதிர்கொண்டுள்ளது. இதனால், இலங்கைக்கு மட்டுமே உரிய பல உயிரினங்கள் உலகிலிருந்து முற்றாக விடைபெறும் நிலையும் ஏற்பட்டுள்ளது. உலக காடுகள் பாதுகாப்பு அமைப்பு (IUCN) 2007இல் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கைக்குரிய 16 பாலூட்டி இனங்களில் 14உம், 33 பறவை இனங்களில் 16உம், 101 ஊர்வனங்களில் 37உம், 90 ஈரூடகவாழிகளில் 51உம், 44 நன்னீர் மீன் இனங்களில் 20உம், 246 மொலஸ்க்காக்களில் 204உம், 20 வண்ணத்துப்பூச்சி இனங்களில் 13உம் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவை தவிர, தாவரங்களும் அழியும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளன.

## உயிர்ப்பல்வகைமையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம்

ஒரு நாட்டின் உயிர்ப்பல்வகைமையைப் பாதுகாப்பது என்பது, அந்நாட்டின் சூழல் பாதுகாப்புக்கும் காலநிலை சமநிலைக்கும் மிகவும் அவசியமாகின்றது. உயிர்ப்பல்வகைமைக்குப்



noolaham.org | aavanaham.org

# ...ின் முக்கியத்துவம்



பாதிப்பு ஏற்படும் போது, சூழல் மற்றும் காலநிலையில் அதன் தாக்கத்தை நாம் அவதானிக்கலாம். அத்துடன், மனித வாழ்விலும் இதனால் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

**உயிர்ப்பல்வகைமையை பாதிக்கும் பிரதான காரணிகள்**

- ★ இருப்பிடங்களை இழத்தல்
- ★ வளங்கள் எல்லைமீறி சுரண்டப்படுதல்
- ★ சுற்றாடல் மாசடைவு
- ★ காலநிலை மாற்றங்கள்
- ★ ஆக்கிரமிப்பு உயிரினங்களின் அறிமுகமும் பெருக்கமும்

போன்றவை உயிர்ப்பல்வகைமையைப் பாதிக்கும் பிரதான காரணிகளாகும். இவை தவிர, உயிர்ப்பல்வகைமையைப் பாதிக்கின்ற மேலும் சில காரணிகள் வருமாறு:

**★ காடழிப்பு:**

சனத்தொகை அதிகரிப்புடன் மனித தேவைகளும் அதிகரித்துச் செல்வதனால், தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக காடுகள் அழிக்கப்படுகின்றன. காடழிப்புக் காரணமாகவும் உயிர்ப்பல்வகைமைக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

**★ வர்த்தக ரீதியிலான வளர்ச்சி:**

வர்த்தக ரீதியிலான வளர்ச்சியும் உயிர்ப்பல்வகைமையில் தாக்கம் செலுத்துகின்றன. இலங்கையில் கோப்பி, தேயிலை, கறுவா, றப்பர் ஆகிய வர்த்தகப் பயிர்களின் வளர்ச்சி காரணமாக, பாரம்பரிய சூழல் தொகுதிகள் அழிவடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**★ மரபணுக்களை மாற்றுதல்:**

அதிக விளைச்சல் மற்றும் பயன்பாட்டினைப் பெறும் நோக்கில் தாவரங்களினதும் உயிரினங்களினதும் மரபணுக்களில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இதனால், தாவரங்கள் மற்றும் விலங்குகளின் இயற்கைத் தன்மையில் மாற்றங்கள் ஏற்படுவதோடு, பெரும் அச்சுறுத்தலாகவும் அமைந்துவிடுகின்றன.

**★ அபிவிருத்திப் பணிகள்:**

ஒரு நாட்டின் அபிவிருத்தியின் போது, நாட்டின் உயிர்ப்பல்வகைமைத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால், இன்றைய காலத்தில் அபிவிருத்தி என்பது ஒரு நாட்டின் உயிர்ப்பல்வகைமைக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துவிடுகின்றது.

(20 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(18,19 ஆம் பக்கங்களின் தொடர்ச்சி...)

### உயிர்ப்பல்வகைமையைப் பாதுகாத்தல்

உயிர்ப்பல்வகைமையின் முக்கியத்துவத்தை அறிந்துகொண்டு அதற்கு ஏற்படும் பாதிப்புகளை தடுத்தல், அது பற்றி சமூகத்தில் விழிப்புணர்வூட்டுதல் மற்றும் அதனை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவையே 'உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாத்தல்' என்பதை குறிக்கின்றது. உயிர்ப்பல்வகைமையைப் பாதுகாப்பதற்காக நாம் அனைவரும் பங்களிப்பு செய்ய முடியும்.

### நம்மால் செய்யக்கூடியவை

- ★ உயிர்ப்பல்வகைமை சூழல் தொகுதியை இனங்கண்டுகொள்ளல்.
- ★ அந்த சூழல் தொகுதி, அங்குள்ள தாவரங்கள், விலங்குகளை கண்காணித்தல் மற்றும் பாதுகாத்தல்.
- ★ இது தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தல்.

### பாடசாலைகளால் மேற்கொள்ளக்கூடியவை

உங்கள் பாடசாலைக்கு அருகாமையில் இயற்கையாக உருவான உயிர்ப்பல்வகைமை சூழல் தொகுதிகள் இருப்பின், அவற்றைப் பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுங்கள். அந்த சூழல் தொகுதிகள் தொடர்பான விபரங்களைப் பெற்று அங்குள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகள் குறித்த விபரங்களையும் சேகரித்துக்கொள்ளுங்கள். இது குறித்து அப்பகுதிவாழ் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுங்கள். இதற்காக துண்டுப்பிரசுரங்கள், கையேடுகளையும் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

### உயிர்ப்பல்வகைமைகொண்ட சூழல் தொகுதிகள்

வனாந்தர சூழல் தொகுதி, புல்வெளிகள் கொண்ட சூழல் தொகுதி (சவன்னா, ஈரநிலம்), உள்ளக நீர்ச் சூழல் தொகுதி (சதுப்பு நிலம், ஏரி, குளம், ஆறு), கரையோரம் மற்றும் கடல் சூழல் தொகுதி, கண்டல் காடுகள், பவளப்பாறைகள், முகத்துவாரப் பகுதிகள், விவசாய நிலங்கள் போன்றவற்றை உயிர்ப்பல்வகைமை கொண்ட சூழல் தொகுதிகளாகக் கருதலாம். இந்த தொகுதிகளைப் பாதுகாக்க நாம் செய்யக்கூடியவை வருமாறு:



- ★ காடுகளை உருவாக்குதல் மற்றும் அது பற்றி தெளிவுபடுத்தல்.
- ★ காடுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பாதுகாத்தல்.
- ★ நீர்நிலைகள் மற்றும் நீரியல் வளங்களைப் பாதுகாத்தல்.
- ★ உயிர்ப்பல்வகைமை நிலவும் சூழல் தொகுதிகள் தொடர்பான சட்ட ரீதியிலான தலையீடுகளை பலப்படுத்தல்.
- ★ குப்பைகளை சரியான முறையில் அப்புறப் படுத்தல் மற்றும் மறுசுழற்சி செய்தல்.
- ★ நச்சுப் பதார்த்தங்களை வெளியேற்றும்போது திட்டமிட்ட நடைமுறைகளைப் பின்பற்றுதல்.
- ★ தொழிற்சாலைகள், கட்டடங்கள் நிர்மாணிப்பின்போது சட்ட ரீதியிலான அணுகுமுறைகளைப் பின்பற்றுதல்.
- ★ தனித்துவமான தாவரங்கள் மற்றும் ஏனைய உயிரினங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.
- ★ புதிய ஆக்கிரமிப்புத் தாவரங்களினாலும் விலங்குகளினாலும் அப்பகுதிக்குரிய உயிர்ப்பல்வகைமைத்துவத்திற்கு பாதிப்புகள் ஏற்படுமாயின், அது குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்தல்.
- ★ ஆறுகள் மற்றும் அவற்றை சார்ந்த பகுதிகளை பாதுகாத்தல்.

### உயிர்ப்பல்வகைமையைப் பாதுகாப்பதில் பங்களிப்பு செய்யும் நிறுவனங்கள்

இலங்கையின் உயிர்ப்பல்வகைமையைப் பாதுகாப்பதில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்களிப்புகளைச் செய்து வருகின்றன. உயிர்ப்பல்வகைமைத்துவத்திற்கு ஆபத்து விளைவிப்பவர்கள் பற்றியும், பாதிப்படைந்துள்ள தொகுதிகள் பற்றியும் இந்த நிறுவனங்களிடம் முறையிட முடியும்.



**உயிர்ப்பல்வகைமையைப் பாதுகாப்பதற்காக பங்களிப்புச் செய்யும் அரச நிறுவனங்கள் சில வருமாறு:**

- ★ மத்திய சுற்றாடல் அதிகாரசபை
- ★ வனப் பாதுகாப்பு திணைக்களம்
- ★ வனஜீவிகள் பாதுகாப்பு திணைக்களம்
- ★ கரையோரப் பகுதிகள் பாதுகாப்பு திணைக்களம்
- ★ விவசாய திணைக்களம்
- ★ தாவரவியல் பூங்கா மற்றும் விலங்குகள் சரணாலய திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சீனக் குடியரசை உருவாக்கிய

# மாவோ சேதுங்

சீனா மக்கள் குடியரசைத் தோற்றுவித்து உலகில் வேறெந்த நாட்டுக்கும் சளைக்காத விவசாய, கைத்தொழில், தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார துறையைக் கட்டி எழுப்பியவர்தான் மாவோ சேதுங் ஆவார். இவர் அந்நாட்டின் கௌரவம் மிகுந்த தலைவராகவும் திகழ்ந்தார். இவர் சீன 'மக்களால் சீனாவின் தந்தை' எனவும் 'தலைவர் மாவோ' என்றும் அன்புடன் அழைக்கப்பட்டார்.



ஆளும் சீன தேசிய கட்சி (KMT)க்கெதிராக போராடுவதே இதன் நோக்கமாகும்.

முழுமையான தூரம் 9000+

சென்ற நாட்கள் 370+

மாவோ கொம்யூனிசக் கட்சியின் செம்படை வீரராக




'லோங்மார்ச்' பயணப்பாதை

இந்த ஊர்வலத்தில் 87,000 கம்யூனிச ஆதரவாளர்கள் பங்குபற்றிய பொழுதிலும் இறுதிவரை உயிருடன் இருந்தவர்கள் 10,000 பேர் மாத்திரமே.



கொம்யூனிசக் கட்சியின் செம்படையோடு மாவோ

KMT தலைவர்கள் நாட்டை விட்டுச் சென்றனர்.



## 1949
ஒக்டோபர் முதலாம் திகதி மாவோவின் தலைமையில் மக்கள் சீனக் குடியரசு (PRC- People's Republic of China) உதயமாகியது.



தலைவர் 'மாவோ' 'மக்கள் சீனா' வாகப் பிரகடனப்படுத்தல்

PRC உத்தியோகபூர்வ இலச்சினை



## 1949
ஜனவரி 21 இல் சீன தேசிய கட்சி தோல்வியைத் தழுவியது.

## 1943
சீன கொம்யூனிசக் கட்சியின் தலைவராக தெரிவுசெய்யப் பட்டார். அக்காலகட்டத்தில் அரசுக்கெதிரான உள்நாட்டு யுத்தத்திற்கு அமெரிக்கா பின்புலமாக இருந்தது.

## 1938
ஜிளங் க்விங் எனும் பெண்மணியை திருமணம் முடித்தார். அவர் 'மெடம் மாவோ' என அழைக்கப்பட்டார்.

## 1933
ஒக்டோபர் மாதம் முதல் 1935 ஒக்டோபர் வரை ஜியெங்ஷி மாகாணம் முதல் ஷெங்க்ஷி மாகாணம் வரை நடைபெற்ற புகழ்பெற்ற 'லோங் மார்ச்' எனும் செம்படையினரின் நடைபயணத்திற்கு தலைமை தாங்கி வழிநடத்தினார்.

## 1930
மாவோவின் மனைவி மற்றும் மகன் KMT அரசின் இராணுவத்தினரால் இலக்கு வைக்கப் பட்டனர். அவர்கள் மாவோவின் மனைவியைக் கொலை செய்தனர்.

## 1927
KMT கட்சி என அழைக்கப்படும் சீன தேசிய கட்சி ஆட்சிக்கு வந்தது. அதன் தலைவரான சன் யாட் சென் சீனாவில் மார்க்சீய கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட கொம்யூனிஸ்ட் கட்சியினருக்கு எதிராகச் செயற்பட்டார்.

KMT கட்சிச் சின்னம்

## 1928
மாவோ உள்ளிட்ட குழுவினர் KMT கட்சிக்கு எதிராக கெரில்லாப் போராட்டத்தை மேற்கொண்டனர்.



ரஷ்ய தலைவர் வி.ஐ.லெனின் மற்றும் ரஷ்யாவின் புரட்சிகர அரசியலை முன்மாதிரியாகக் கொண்டார்

## 1924
குவாமிங்டெங் (KMT) கட்சியின் முதலாவது தேசிய மகாநாட்டில் கலந்துகொண்டார்.

## 1921
பெகிங் பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் பணியாற்றும்போது, 'மார்க்ஸிய கோட்பாடு' குறித்து அறிந்துகொண்டார்.

## 1921
ஜூன் 1 ஆம் திகதி சீன கொம்யூனிசக் கட்சியினுடைய தேசிய காங்கிரஸின் முதல் தவணைக் கூட்டத்தில் பங்கு பற்றினார்.



## 1920
கல்லூரியின் பேராசிரியரான யெங் செங்ஜியின் மகளாகிய யெங் கைஹுய் என்பவரை திருமணம் செய்தார்.

இது அவரின் இரண்டாவது திருமணமாகும். இருவருக்கும் இரு பிள்ளைகள் பிறந்தன.

## 1918
ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பட்டம் பெற்றார். பின்னர், ஒரு வருடம் கழித்து பீஜிங் நகரிற்கு வந்தார்.

## 1912
ஆசிரிய பயிற்சிக்காக ஹுனான் பிரதேசத்தின் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் சேர்ந்தார்.





ஹுனான் மாகாண தலைநகரான செங்ஷாஹில் அரச படைகளுடன் கடும் மோதல் நடைபெற்றது

அரசியல் கொள்கைகளுக்கு தந்தையின் வழிகாட்டல் காரணமாகின

## 1911
க்கிங் அரச வம்சத்திற்கெதிராக சீனப்புரட்சிப் படைப்பில் இணைந்தார்.



## 1910
ஹுனான் மாகாணத்தில் கொடிய பஞ்சம் ஆரம்பித்தது. அக்காலகட்டத்தில் மக்களுக்கு சேவை செய்த இவர், தந்தையின் வற்புறுத்தலின் பேரில் திருமணம் முடித்தார்.

## 1901-06
தாம் வாழ்ந்த பிரதேசத்தின் ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றார்.

## 1893
டிசெம்பர் 26 ஆம் திகதி சீனாவின் ஹுனான் மாகாணத்தில் பிறந்தார். இவரின் தந்தையாரின் பெயர் மாவோ யிச்செங் என்பதாகும். அவர் ஒரு விவசாயி. தாயின் பெயர் வெண்குய்மெய் என்பதாகும். இவருக்கு மூன்று சகோதரர்கள் இருந்தனர்.






# 1893 - 1976

## 1976
செப்டெம்பர் 09 ஆம் திகதி காலமானார். அவருக்கு ஏற்பட்ட இதய நோயே மரணத்திற்கு காரணமாகும்.

## 1974
கடும் சுகயீனமுற்றார்.



பூதவுடலுக்கு சீன மக்களின் இறுதி அஞ்சலி

## 1950
ரஷ்யத் தலைவர் ஜோசப் ஸ்டாலினுடன் சீன - சோவியத் குடியரசுகளின் நட்புறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.



## 1950
திபெத் நாட்டை ஆக்கிரமிக்கத் தீர்மானித்தார்.

## 1953
ரஷ்யாவைப் போலவே சீனாவிலும் கைத்தொழில்மய விரிவாக்கத்திற்கான ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.





மாவோ தனது மக்களின் ஆதரவை ஏற்றுக் கொள்ளல்

## 1954
செப்டெம்பர் 27 ஆம் திகதி மக்கள் சீனாவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். இக்காலகட்டத்தில் சீன கொம்யூனிசக் கட்சியைத் தவிர சீனாவில் இயங்கிய ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளும் தடைசெய்யப்பட்டன.

## 1956-57
'நூறு மலர்களை பூக்கச் செய்வோம்' எனும் கருப்பொருளின் கீழ் செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. கொம்யூனிஸ்ட் கட்சியோடு நெருங்கிய உறவைப் பேணுபவர்களை இனங்காண்பதே இதன் அடிப்படை நோக்கமாகும்.



## 1958
இரண்டாவது ஐந்தாண்டு செயற்திட்டமாக 'முன்னோக்கிப் பெரும்பாய்ச்சல்' (Great Leap Forward) நடைமுறைப்படுத்தப்பட்டது. விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்தியை நோக்கி நாட்டை இட்டுச் செல்வதே, இதன் நோக்கமாக இருந்தது.





## 1964
சீனா தனது முதலாவது அணுகுண்டை பரீட்சித்துப் பார்த்தது. இதனை லொப் நூரில் நிகழ்த்தியது. இக்காலகட்டத்தில் சோவியத் சமவுடமைக் குடியரசுடன் கருத்து வேறுபாடுகள் ஆரம்பித்தது.





அதற்கேற்ற கருத்துக்களை உள்ளடக்கிய சிறிய 'செந்நூல்' ஒன்றினை மக்களிடையே விநியோகித்தார்



## 1966-76
சீனாவில் கலாசாரப் புரட்சிக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன.

சீனாவின் அணுசக்தி குறித்து சோவியத் குடியரசு குற்றச்சாட்டை முன்வைத்தது. சீன எல்லையில் தனது படைகளைக் குவித்தது

## 1967
ஜூன் 14 ஆம் திகதி சீனா தனது முதலாவது ஐதரசன் குண்டை லொப் நூரில் பரீட்சித்துப் பார்த்தது.



## 1972
அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்ஸன் பீஜிங் நகருக்கு வருகை தந்து மாவோ சேதுங்கை சந்தித்தார். சீனா ரஷ்யா மீது கொண்ட பகைமையே இதற்கு காரணமாகும்.



லிஜிஆங்கில் அமைக்கப்பட்ட மாவோவின் சிலை



சீனாவின் டிஆனன்மென் சதுக்கத்தில் அமைக்கப்பட்ட சமாதியினுள் மாவோ சேதுங்கின் உடல் வைக்கப்பட்டுள்ளது

டிஆனன்மென்னில் உள்ள மாவோ நினைவு மண்டபம்


டிஆனன்மென் சதுக்கத்தில் உள்ள தங்கச் சிலை

நென்ஜின்னில் அமைக்கப்பட்ட தோர் சிலை

மாவோ சேதுங்கை கௌரவிக்கும் முகமாக வெளியிடப்பட்ட நாணயக் குற்றிகளும் பண நோட்டுகளும்

ஹுனான் மாகாணத் தலைநகரில் நிறுவப்பட்ட மாவோவின் இளமைத் தோற்றம் கொண்ட சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடுகண்ணாவ தேசிய புகையிரத அருங்காட்சியகம்

கொழும்பு- கண்டி வீதியில் கடுகண்ணாவ புகையிரத நிலைய பகுதியில் கடுகண்ணாவ தேசிய புகையிரத அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. 1864 ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் திகதி கொழும்பு மருதானை புகையிரத நிலையத்திலிருந்து அம்பேபுஸ்ஸ புகையிரத நிலையம் வரையில் நடைபெற்ற முதலாவது புகையிரதப் பயணத்திற்கு 150 ஆண்டுகள் நிறைவடைவதனையொட்டியே, கடுகண்ணாவையில் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி இந்த அருங்காட்சியகம் திறக்கப்பட்டது. புகையிரத சேவையில் அன்று முதல் இன்று வரை பயன்படுத்தப்படும் அனைத்து கருவிகளும் இந்த அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. புகையிரதத்தின் வரலாற்றினை பார்வையிடக்கூடியவாறான குளிரூட்டப்பட்ட அதி நவீன வசதிகள் வாய்ந்த சிறப்பு புகையிரத மேடை ஒன்றும் இங்குள்ளது.



சுக்கான் பொருத்தி



கழிவறை




வண்டில்



எழுத்துக்களை வடிக்கும் கருவி




தீயணைக்கும் கருவி



விளக்கு



சமிக்ஞை விளக்குகள்



உபகரணத் தொகுதி



நீர் பம்பி



நேரம் காட்டி



டயரின் 'டெப்லட்' வழிமுறை




புகையிரத சமிக்ஞைகள்



புகையிரத ஓட்டுனர் கட்டுப்பாட்டுப் பகுதி



ஆரம்ப காலத்தில் மின் சமிக்ஞை



பழைய புகையிரதமொன்றின் உட்புறத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணத்துப்பூச்சியின் சிறகுகளின் ரகசியம்

விதம் விதமாக வண்ணத்துப் பூச்சிகளின் சிறகுகள் மிளிர்வது தொடர்பில் அமெரிக்காவின் யேல் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர் வினோத் குமார், சாரநாதன் தலைமையில் ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இதற்காக, விஞ்ஞானிகள் குழு ஐந்து வகையான வண்ணத்துப் பூச்சிகளை தெரிவுசெய்து அதன் சிறகுகளின் முப்பரிமாண உள்ளமைப்பு ஏடுகளை அறிய கதிர் ஒளிச் சிதறலுக்கு உட்படுத்தி ஆய்வு செய்தனர். அந்த ஆய்வில் வண்ணத்துப் பூச்சிகளின் இறகுகள் 'கைராய்டு' எனப்படும் மிகச்சிறிய கட்டமைப்பிலானது எனவும், இந்த கைராய்டுகள் கிரிஸ்டல்கள் (படிகம்) போல செயல்பட்டு சூரிய ஒளியை விளிம்பு விளைவுக்கு உட்படுத்துகிறது என்பதையும் கண்டறிந்துள்ளனர்.

மேலும், வண்ணத்துப்பூச்சியின் சிறகில் அமைந்துள்ள செல் ஏடு சவ்வானது, வளர்ந்து செல்களின் உள்ளே மடித்து வைக்கப்படுகின்றது. இந்த மடித்து வைக்கப்படும் சவ்வானது, இரு கைராய்டுகளாக உருவாகிறது. வெளி மற்றும் உட்புற செல்களின் சவ்வுகளானது, இந்த இரு கைராய்டுகளையும் கண்ணாடி அமைப்புடைய வலைத்தளமாக மாற்றுகின்றது. சிடின், வெளிப்புற கைராய்டில் சேமிக்கப்படுகிறது. இதனால் அது ஒரு திடப் படிகமாக மாறுகிறது.

பின்னர் அந்த செல் இறந்துபோவதால் ஒரு மிக நுண்ணிய அமைப்பினைக் கொண்ட ஒளி ஊடுருவும் தன்மையுடன் படிகம் உருவாகிறது. இந்த படிகம் போன்ற அமைப்பு ஒன்றை மற்றும் ஒளியின் எல்லா அலைநீளங்களையும் அதனுள் கடத்திவிடுகின்றது.

இதன்போது வண்ணத்துப்பூச்சியின் இறகுகளில் உள்ள கைராய்டின் அளவு நிறத்தை தீர்மானிக்கின்றது. அதன் அமைப்பு சுருங்கும்போது திறம் மங்கலாகவும் விரிவடையும் போது சிவப்பாகவும் மாறுகிறது என கண்டறியப்பட்டது.



# சாரதி இல்லாத பஸ்

சாரதி இல்லாத பஸ் ஒன்று தனது முதலாவது பரீட்சார்த்த பயணத்தை பிரிட்டனில் மேற்கொண்டுள்ளது. அடுத்து வரும் மூன்று வாரங்களில் பயணிகள் இந்த சாரதிகள் இல்லாத



பஸ்ஸில் பயணம் செய்யமுடியும் என்றும் கருதப்படுகின்றது.

இந்த பஸ் மணிக்கு 16 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடியது. இது கணனியின் மூலம் கட்டுப்படுத்தப் படுகின்ற மையும் குறிப்பிடத்தக்கது.

# மாட்டுச் சாண எரிவாயு மூலம் இயங்கும் பஸ் வண்டி

மாட்டுச் சாணத்தில் இருந்து தயாரிக்கப்படும் எரிவாயு மூலம் இயங்கும் பஸ் ஒன்று இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் 'போனிக்ஸ்' ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகம், இந்த பஸ்ஸைக் கண்டுபிடித்துள்ளது. 'அசோக் லேலண்ட்' நிறுவனம் இதனை தயாரித்துள்ளது. 54 இருக்கைகளையும்



இந்த பஸ் கொண்டுள்ளது. கடந்த 8 ஆண்டுகளாக மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாக இந்த மாட்டுச் சாணத்திலான எரிபொருளில் இந்த பஸ் செயல்படத்தொடங்கியுள்ளது.

மாட்டுச் சாணத்தில் இருந்து கிடைக்கும் எரிவாயுவில் மீத்தேன் அடங்கியுள்ளது. நச்சுத் தன்மையை வெளிப்படுத்தாத இந்த எரிவாயுவைப் பயன்படுத்தி இந்த பஸ் இயங்குவதால் சுற்றுச் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் கூறப்படுகின்றது.

# செங்கோள் பற்றி அறிந்துள்ளீர்களா?

சூரியக்குடும்பத்தில் பூமிக்கு அடுத்ததாக, நான்காவது கோளாக செவ்வாய் கோள் காணப்படுகின்றது. இக்கோள் 'செங்கோள்' என்றும் அழைக்கப்படுகின்றது.

செவ்வாய் கிரகம் தொடர்பில் விஞ்ஞானிகள் தொடர்ந்தும் ஆய்வுகளை முன்னெடுத்துள்ள நிலையில், செவ்வாய் கோளைப் பற்றிய சில உண்மைகளை நாமும் தெரிந்துகொள்வோம்.



பூமியின் ஈர்ப்புவிசையில் 37 சதவிகிதம்தான் செவ்வாயில் இருப்பதால் பூமியில் எம்பிக் குதிப்பது போல் குதித்தால் 3 மடங்கு உயரத்திற்கு மிதப்பீர்கள்.

பாறைக்கோளமான செவ்வாய்க்கு ரோமானிய போர் கடவுளின் பெயர் (மார்ஸ்) சூட்டப்பட்டுள்ளது.

சூரியனிலிருந்து நான்காவது கோளான செவ்வாயில், ஒரு நாள் என்பது 24 மணி நேரம் 39 நிமிடங்களுமாகும்.

பூமியைப்போலவே, எரிமலைகள், பள்ளத்தாக்குகள், பருவநிலை மாறுதல்களும் செவ்வாயில் காணப்படுகின்றது.



செவ்வாயில் உள்ள உயரமான எரிமலைக்கு 'ஒலிம்பஸ் மோன்ஸ்' என்று பெயர். இது பூமியின் எவரெஸ்ட் சிகரத்தையும் விட உயரமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீர் நிரம்பிய உடல்



உலகிலுள்ள எல்லா உயிரினங்களும் உயிர்வாழ நீர் தேவை. பெரும்பாலான உயிரினங்களின் உடல் நிறையில் 90 சதவீதமான பகுதி நீரினால் நிரப்பப்பட்டுள்ளது. அவ்வாறே, சராசரி மனித உடலின் பெரும்பகுதி (சுமார் 60 சதவிதமான அளவு) நீரினால் நிரம்பியிருக் கின்றது. மனித உடலின் ஒவ்வொரு உறுப்பும் நீரினால் நிரம்பியுள்ளது. அதன்படி, மூளையில் 75 சதவீதமும் இதயத்தில் 73 சதவீதமும் நீர் அடங்கியுள்ளது. நுரையீரலில் 83 சதவீதம் நீர் உள்ளது. தோலில் 64 சதவீதமும் தசைகளில் 75 சதவீதமும் சிறுநீரகத்தில் 83 சதவீதமும் உடலிலுள்ள எலும்புகளில் 31 சதவீதமும் நீர் அடங்கியுள்ளது.




# கண்டத்தட்டுகளின் நகர்வு




நாம் வாழும் பூமி, பல கண்டத்தட்டுகளால் ஆனது. இந்தத் தட்டுகள் அனைத்தும் ஏதோ ஒரு திசையில் நகர்ந்துகொண்டே இருக்கின்றன. கண்டத்தட்டுகள் நகரும் வேகமானது நமது நகங்களின் வளர்ச்சி வேகத்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது.



# தூய காற்றின் நண்பன்

நாம் வாழும் சுற்றாடலில் உள்ள காபன் டையொக்சைட் வாயுவை உள்ளெடுத்து அதனை ஒக்சிஜனாக மாற்றும் பணியை



மரங்கள் செய்கின்றன. இதனால், 'தூய காற்றின் நண்பன்' என மரங்கள் வர்ணிக்கப்படுகின்றன. இது தவிர, ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் வளர்ந்திருக்கும் மரங்களால் ஓர் ஆண்டில் அவற்றை சுற்றியுள்ள இடங்களில் பரவியிருக்கும் 13 தொன் தூசு மற்றும் நச்சு வாயுக்களை அகற்ற முடியுமாம்!



# திமிங்கிலங்கள்



நீரில் வாழும் பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கினமே 'திமிங்கிலம்' ஆகும். திமிங்கிலத்தில் சுமார் 75 வகைகள் இருப்பதாக கூறப்படுகின்றது. உலகில் வாழும் மிகப் பெரிய பாலூட்டி விலங்கினமாக நீலத்திமிங்கிலம் உள்ளது. திமிங்கிலங்கள் நீரில் வாழ்வதோடு; மீன்கள் போன்ற தோற்றத்தில் காணப்படுகின்றபோதும்கூட, அவை கொண்டுள்ள சில பிரத்தியேக இயல்புகள் காரணமாக அவை மீனினத்திற்குள் உள்ளடக்கப்படுவதில்லை. திமிங்கிலங்கள் தமக்குரிய இரையை தேடி கடலின் நீண்ட ஆழம் வரை பயணிக்கக்கூடியவை. இவை அதிக உடல் எடையைக் கொண்டிருந்தாலும், வேகமாக நீந்தும் ஆற்றலைப் பெற்றுள்ளன. அத்துடன், திமிங்கிலங்கள் ஒலி சமிக்ஞை முறைகளைக் கொண்டு ஒன்றுடன் ஒன்று தொடர்புகொள்கின்றன.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2017, நொவெம்பர் 29 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 29, 2017.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org